2011 பெப்ரவரி
அணி 07 படை 10
நன்கொடை ரூபா 20.00

# செஞ்சக்தி

மக்கள் விடுதலை முன்னயினின் உத்தியோகபூர்வ செய்தித்தாள் — செய்தி பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டது

**வட பகுதி மக்களை வரவேற்கும் புதிய அரசியல் கலாச்சாரம்!**



பக்கம் 03

**முடிவு கட்ட வேண்டிய ஏமாற்று அரசியல்!**



பக்கம் 04

**தேசிய ஒற்றுமைக்கு கியுபா சிறந்த முன்னுதாரணம்!**



பக்கம் 08

**துனீசியா மக்கள் போராட்டம் வீணாகுமா?**



பக்கம் II







மக்கள் விடுதலை முன்னணியின் வட பகுதி உள்ளூராட்சி சபைத் தேர்தலில் களமிறங்கியுள்ள வேட்பாளர்களுக்கான சந்திப்பொன்று வவுனியா வன்னி (ஹோட்டல்) இன்னில் நடைபெற்றது. இதில் ஜே.வி.பி தலைவர் தோழர் சோமவன்ச அமரசிங்க கலந்துக் கொண்டார் படத்தில் தோழர் சோமவன்ச அமரசிங்க பேசுவதையும் தோழர் சந்திரசேகர் மொழிப்பெயர்ப்பதையும் கலந்துக்கொண்ட வேட்பாளர்களின் ஒரு பகுதியினரையுமே காண்கிறீர்கள்

# சிறிய தேர்தலில் பெரிய மாற்றம்

உள்ளூராட்சி சபைத் தேர்தல் ஏனைய தேர்தல்களோடு ஒப்பிடுகையில் அவ்வளவு மதிக்கத்க்க தேர்தலாக இல்லாவிட்டாலும் எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலானது இலங்கை அரசியல் களத்தில் பாரிய மாற்றங்களுக்கான ஆரம்பமாகும் என மக்கள் விடுதலை முன்னணி பிரச்சாரச் செயலாளர் தோழர் விஜித ஹேரத் தெரிவிக்கிறார். எதிர்வரும் தேர்தல் குறித்து மக்கள் விடுதலை முன்னணியின் நிலலைப்பாடு தொடர்பாக செஞ்சக்திக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவர் இக்கருத்துக்களை தெரிவித்தார். அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

வாழ்க்கை சுமை அதிகரித்துள்ளதாலும், தொழிலின்மை, கல்வி, சுகாதார வசதிகள் துண்டிப்பு மற்றும் தேர்தல் காலங்களில் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாதது போன்ற காரணிகளால் ராஜபக்ஷ அரசை மக்கள் வெறுக்கின்றனர் என்பதை சுட்டிக்காடுவதுடன் நடந்து முடிந்த தேர்தல்கள் அரசாங்கத்துக்கு வாக்கழித்த பெரும்பாலானவர்களின் வாக்குகள் இம்முறை அரசாங்கத்துக்கு கிடைக்காதெனவும் கூறினார். குறிப்பாக தபால் மூலம் வாக்கிப்பதற்கான கோரிக்கைக்கான காலத்தை மூன்று தடவை நீடித்தாலும்

அரசு சார்பாக வாக்களித்த அரச ஊழியர்கள் இம்முறை 10மூ த்திற்கும் குறைந்த அளவு விண்ணப்பித்திருப்பது இதை

(10ம் பக்கம்...)

# இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் சர்வதேச களத்தில்



உலக ஆசிரியர் சம்மேளனத்தின் யாப்பு ரீதியான மாநாட்டின் செயலாளர் குழுவில் இலங்கையை பிரதிநிதித்துவம் செய்த இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் பிரதான செயலாளர் தோழர் மஹிந்த ஜயசிங்க தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

வங்காளதேசம் டாக்கா நகரில் இடம்பெற்ற இம் மாநாட்டின் போது எமது நாட்டு ஆசிரியர்கள் தற்போது முகம் கொடுக்கும் பதவி உயர்வு வழங்கப்படாமை, சம்பள நிலுவை வழங்கப்படாமை, சம்பள முரண்பாடுகள் தீர்க்கப்படாமை, தான்தோன்றித்தனமாக இடமாற்றங்கள் செய்வது போன்ற பிரச்சினைகள் தொடர்பாக மாநாட்டின் கவனத்தை ஈர்ப்பதற்காக இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் செயற்பட்டுள்ளது. இச்சங்கத்திற்கு கிடைத்த புதிய அங்கத்துவத்துடன் இன்னும் புதிய சர்வதேச மட்டத்திலான தொடர்புகளை வலுப்படுத்துவதற்கு எதிர்பார்ப்பதாகவும் உலக ஆசிரியர் சம்மேளனத்தின் நடவடிக்கைகளை எமது நாட்டில் உரிய முறையில் நடாத்துவதற்கும் எதிர்பார்க்கின்றனர்.

# இந்த அரசிற்கு மக்கள் எதிர்பார்ப்புகளை வழங்க முடியாது!



தேசிய தொழில் சங்க மத்திய நிலையம் 10,000 ரூபாவால் சம்பள உயர்வு வழங்கப்பட்ட வேண்டுமென கோரும் அதேவேளை அரசின் பல்வேறு சலுகைகளை பெறும் தொழில் சங்கத் தலைவர்களென கூறிக்கொள்ளும் ஒரு சிலர் அரசாங்கத்தால் கொடுக்க முடிந்த சம்பள உயர்வை கோருகின்றனர் என தேசிய தொழில் சங்க சம்மேளனத்தின் தலைவர் தோழல் கே. டீ. லால் காந்த கூறுகிறார். அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

தொழிலாளர் கோருவது அரசாங்கத்துக்கு வழங்க முடிந்த அளவை அல்ல அரசாங்கம் வழங்க வேண்டிய தொகையையே ஆகும். எனவே ரூபா 10,000 த்தால் சம்பளத்தை உயர்த்து அல்லது பதவியிலிருந்த விலகு என்பதை வற்புறுத்த மக்கள் தாராக வேண்டும் என வலியுறுத்தினார்.

தற்போது இந் நாட்டு மக்கள் முகம் கொடுக்கும் எந்தவொரு பிரச்சினைக்கும் இந்த அரசிற்கு தீர்வு வழங்க முடியாத நிலையிலுள்ளது. குறிப்பாக இன்று நிலவும் சமுதாய, பொருளாதார பிரச்சினைகளை தீர்க்க முடியாது. யுத்த வெற்றிகளை சுட்டிக்காட்டி தொடர்ந்தும் அரசு தனது அதிகாரத்தை கொண்டு செல்ல முடியாது. கடந்த வரவு- செலவு திட்டத்தை எண்ணிக்கையளவில் அரசு வெற்றி கொண்டாலும் அரசியல் ரீதியாக தோற்றடிக்கப்பட்டுள்ளது. இதனால் சமுதாயத்தில் எந்த தரப்பினருக்கும் சலுகைகள் கிடைக்கவில்லை. மகிந்த ராஜபக்ஷவை சூழவிருந்த கலைஞர்கள், புத்திஜீவிகள் மட்டுமல்ல சிறிலங்கா சுதந்திரக் கட்சி அங்கத்தவர்கள் கூட இவரை விட்டுச் செல்கின்றனர். நகரப் புறங்களில் மக்கள் மத்தியில் அரசாங்க எதிர்ப்பு மனோநிலை காணப்படுவதால் நகரங்களில் உள்ளூராட்சி சபைகளின் தேர்தலை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. நாளுக்கு நாள் அதிகரித்துவரும் அத்தியாவசிய பொருட்களின் விலை காரணமாக பொதுமக்கள் வீதிக்கு இறங்கி கண்டனத்தை தெரிவிப்பதற்கு தயாராகியுள்ளனர். ராஜபக்ஷ ஆட்சிக்கு ஒட்டுத்தீவுகள் தருவதை தவிர வேறு புதிய அரசியல் திட்டமும் இல்லை. நாளுக்கு நாள் அரசு பின்னோக்கி செல்வதையே காணக்கூடியதாகவுள்ளது. இவ் உள்ளூராட்சி சபை தேர்தலின் பின்பு இது மேலும் உறுதியாகுவதை யாராலும் தடுக்கமுடியாது

# ஒரே தடவையில் எதையுமே செய்ய முடியாத அரசாங்கம் அரசியல் ரீதியான மலச்சிக்கலில்!

**ம.வி.முன்னணி பிரதான செயளாலர் தோழர் ரில்வின் சில்வா**




உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகள் காரணமாக தேர்தல் களை கால தாமதம்செய்கின்றனர். என்று கூறும் கருத்துகளுக்கேற்ப அரசாங்கம் எந்த நடவடிக்கைகளையும் ஒரு தடவையில் செய்து கொள்ள முடியாமல் அரசியல் ரீதியான மலச்சிக்கலை அடைந்துள்ளதென மக்கள் விடுதலை முன்னணியின் பிரதான செயலாளர் தோழர் ரில்வின் சில்வா குறிப்பிடுகிறார்.

கடந்த 12ம் திகதி மக்கள் விடுதலை முன்னணி தலைமையகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் போது தோழர் ரில்வின் சில்வா மேலும் கருத்து வெளியிடுகையில் நாட்டின் சகல உள்ளூராட்சி சபைகளின் தேர்தலை ஒரே தடவையில் நடத்த வேண்டும் என வலியுறுத்தினார்.

கிரிகெட் போட்டிகள் நடைபெறும் என்பது அரசு ஏற்கனவே தெரிந்துகொண்ட விடயமாகும். இதேபோன்று தேர்தல் நடத்த வேண்டும் என்பதும் தெரிந்த விடயமாகும். ஆகவே குறைந்த பட்சம் சிறிது காலத்திற்கு கூட எதிர்காலம் குறித்து திட்டமிடக்கூடிய திறமை இருந்திருந்தால் உலகக் கிண்ண போட்டிகளுக்கு இடையூறு ஏற்படாமல் தேர்தலை நடாத்த அரசுக்கு முடிந்திருக்கும் . ஆனால் இவ்வாறான தூரநோக்கு பார்வை தற்போதைய அரசுக்கு இல்லை.

நாடளாவிய மட்டத்தில், யாழ்பாண மாநகர சபை உட்பட பெரும்பாலான மாநகர சபைகளில் உலகக் கிண்ண போட்டியை காரணம் காட்டி தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. ஆனால் பெரும்பாலான இடங்களில் விளையாட்டரங்குகள் இல்லை. உண்மையான விடயம் என்றவென்றால் அரசாங்கத்துக்கு வெளியே இறங்க முடியாத இடங்களில் கிரிகெட் போட்டிகளுக்கு மறைந்து தேர்தல் ஒத்திவைத்துள்ளனர். அது ஜனநாயகத்தை மீறுவதாகவே நாம் கருதுகிறோம்.

அவசரகால சட்டத்துக்குள்ளேயே இத்தேர்தலை யும் நடத்துகிறார்கள் கடந்த தேர்தல்களையும் அவசரகால சட்டத்துக்குள்ளேயே நடத்தினார்கள் அன்றைய காலகட்டத்தில் அரசு கூறியது யுத்தம் நிலவிய காரணத்திலனால் அவசரகால சட்டத்திற்குள் தேர்தலை நடத்த வேண்டும் என்று ஆனால் யுத்தம் முடிந்து ஒன்றரை வருடங்களை கடந்துள்ள சூழலிலும் அவசரகால சட்டத்தை நீக்கவில்லை.

இது மட்டுமன்றி சுயாதீன ஆணைக் குழுக்களை நிலைநாட்டுவதும் இல்லை. அரசு சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு பயந்துள்ளனர். இப்போது ஆணைக்குழுக்களை ஜனாதிபதியே நியமிக்கிறார். ஆனால் தேர்தலுக்கு பின்பே ஆணைக்குழுக்களை நியமிப்போம் என கூறுகின்றனர். தாம் நியமிக்கும் ஆணைக்குழு தொடர்பாகவும் ஜனாதிபதிக்கு நம்பிக்கையில்லை அதிகாரிகள் தொடர்பாக நம்பிக்கையில்லை இவ்வாறான நிலைக்கு அரசு தள்ளப்பட்டுள்ளது.

ஆகவே அவசரகால சட்டத்தை நீக்கி சாதாரண சட்டத்தின் கீழ் தேர்தலை நடத்த வேண்டுமென்று நாம் அரசை வற்புறுத்துகின்றோம். இதேபோன்று அனைத்து உள்ளூராட்சி சபைகளின் தேர்தலையும் ஒரே தடவையில் நடத்த வேண்டும் எனவும் வலியுறுத்துகிறோம் என தோழர் ரில்வின் சில்வா குறிப்பிட்டதோடு இச்செய்தியாளர் மாநாட்டில் மக்கள் விடுதலை முன்னணியின் பிரச்சாரச் செயலாளர் தோழர் விஜித ஹேரத்தும் கலந்து கொட்டார்.

# Lanka e news வலைய அலுவலகத்தை தீக்கிரையாக்கியதை வன்மையாகக் கண்டிக்கிறோம்!

**மக்கள் விடுதலை முன்னணி அரசியற்குழு**

Lanka e news வலையச் செய்தி நிறுவன அலுவலகத்தை கடந்த 31ம் திகதி அதிகாலை "இனந்தெரியாதோரினால்" தீக்கிரையாக்கப்பட்டது. இந்த அருவருக்கத்தக்க செயலை மிக வன்மையாக கண்டிப்பதாக சுட்டிக்காட்டி மக்கள் விடுதலை முன்னணி அரசியற்குழு வெளியிட்ட ஊடக அறிக்கை பின்வருமாறு.

Lanka e news வலைய செய்தி அலுவலகத்தை இன்று அதிகாலை "இனந்தெரியாதோரினால்" தீக்கிரையாக்கி பெரும் சேதம் விலைவித்துள்ளனர். மிகத் துணிச்சலுடன் அரசின் அடாவடித்தனங்களை வெளியுலகிற்கு காட்டிய Lanka e news வலைய அலுவலகத்தை தீக்கிரயக்கி அழித்ததை மக்கள் விடுதலை முன்னணி வன்மையாக கண்டிக்கின்றது.

இச்சம்பவம் "இனந்தெரியாதோரினால்'' நடத்தப்பட்டதென குறிப்பிட்டாலும் இவ்வினந் தெரியாதோர் யார் என்பது முழு நாட்டு மக்களும் அறிவர். இது தொடர்பாக எதுவித சந்தேகமும் எளமுடியாது ஏன் என்றால் இச் செய்தி நிறுவனம் ஊடாக தற்போதைய அரசின் நடவடிக்கைகளை விமர்சித்ததினால் இதன் நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு கடந்த ஜனாதிபதித் தேர்தலில் நடவடிக்கை எடுத்தது இந்நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள்.

ஒரு தடவை இந்நிறுவனம் இயங்கிய கட்டிட உரிமையாளர் மூலமாக இதன் செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இது மட்டுமன்றி இன்று அதிகாலை இச்சம்பவம் நடைபெறுவது இதன் ஊடகவியலாளரான பிரகீத் எக்னலிகொட காணாமற்போய் ஒரு வருடம் பூர்த்தியாகிய தறுவாயிலாகும். எனவே இந்நிறுவனம் அரசின் இலக்காக இருந்ததினால் இதன் நடவடிக்கைகளை நிறுத்துவது அரசாங்கத்தின் தேவையென்பது தெளிவாகின்றது.

மறுபுறம் சுயாதீனமாக கருத்துத்தெரிவிக்கும் மற்றும் அரசின் எச்சில்களை ஏற்றுக்கொள்ளாத ஊடகநிறுவனங்களையும், ஊடகவியலாளர்களையும் வேட்டையாடத் தொடங்கியது இன்று, நேற்றல்ல இதற்கு முன்பு சிரச, சியத, ஆகிய தொலைக்காட்சி நிறுவனங்களையும், சண்டே லீடர் பத்திரிகை அலுவலகத்தை தீக்கிரையாக்கியது போன்ற சம்பவங்கள் தொடர்பாக இதுவரை எந்த வித சட்ட நடவடிக்கையும் சாத்தியப்படவில்லை. இதுமட்டுமன்றி வடக்கிலிருந்து கிழக்குவரை ஊடக அலுவலகங்கள் தீக்கிரையாக்குதல் ஊடகவியலாளர்களை தாக்குதல், அச்சுறுத்தல், கொலை செய்தல் போன்ற பல சம்பவங்கள் ராஜபக்ஷ அரசின் கீழ் இடம்பெற்றது. ஆனால் இந்நிகழ்வுகள் தொடர்பாக எடுத்த சட்டநடவடிக்கைகள் ஒன்றுமே வெற்றியளிக்காததினால் இதன் பொறுப்பை அரசே ஏற்றுக் கொள்ளவேண்டுமென்பதை கூறத்தேவையில்லை.

ஆகவே பொது மக்கள் நலனிற்காக குரலெழுப்பும் ஊடகங்கள் சுதந்திரமாக தமது நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடிய சூழலை நிர்மாணிப்பதற்காகவும் நாட்டின் ஜனநாயகத்தை பாதுகாத்துக் கொள்வதற்காகவும் கட்சி வேறுபாடின்றி அணித்திரளும்படி இந்நாட்டின் அனைத்து மக்களிடமும் கேட்டுக் கொள்கின்றோம்.

செஞ்சக்தி

மக்கள் விடுதலை முன்னணியின் உத்தியோகபூர்வ செய்தித்தாள்
198.'.19 பஞ்சிகாவத்தை வீதி ,கொழும்பு -10 011-2345594
E-mail sensackthynews@gmail.com

## இரும்பு உறையை வண்டரித்தல்

“இரும்பு உறையை வண்டு அரித்திருக்குமானால் அரிசி உரையை பார்க்காமலே வீசியெறி” என்ற கிராமத்து கதையொன்று உள்ளது. ராஜபக்ஷ ஆட்சியின் கீழ் எமது நாட்டு ஜனநாயகத்திற்கு ஏற்பட்டிருக்கும் பாதிப்பினை பார்க்கும்போது நினைவுக்கு வருவது மேற்கூறிய கூற்றாகும். பல்வேறு வரையறைகளிற்கு, உட்பட்டுள்ள போலித்தனமான ஜனநாயகத்தில் ஏதாவதொரு சுயாதீனமாக இயங்குவதாக காணப்பட்ட நிறுவனங்களும் ஆட்சியாளர்களின் தேவைக்காக செயற்படும்போது சமூகம் பாரிய விளைவுகளையே எதிர்கொள்ளும்.


சரத் பொன்சேகாவின் வழக்கு விசாரணையின்போது இராணுவ நீதிமன்றத்தை ஏற்றுக் கொண்டு நீதிமன்றமென அறிவித்து உயர் நீதிமன்றம் பெற்றுக் கொடுத்த அத்தீர்ப்பினை நாம் எதுவும் கூறாதிருப்போம். அது தொடர்பாக வரலாறு சரியான தீர்ப்பு வழங்கப்படும்.அதேவேளை எமது நாட்டில் வரையறுக்கப்பட்ட முதலாளித்துவ ஜனநாயகம் இப்போது பெரும் சவாலுக்கு உள்ளாகியிருப்பதை எவராலும் மறுதலிக்க முடியாது.

நமது நாட்டு மக்கள் விசேடமாக ஜனநாயகத்தை மதிக்கும் மக்கள் ஜனநாயகத்திற்காக போராட வேண்டும். குரல் கொடுக்க வேண்டும். ஆனால், அதேவேளை பாரிய நெருக்கடியில் அமிழ்ந்துள்ள இந்த பலவீனமான முதலாளித்துவ முறையினுள் முதலாளித்துவ ஆட்சியாளர்கள் நெருக்கடிக்கு செல்லும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவர்களை நிர்வாணமாக்கிய சந்தர்ப்பங்களை வரலாற்றில் எமக்கு காணக்கூடியதாயிருக்கிறது. முதலாளித்துவத்தினுள் சட்டமும் நீதியும் ஒன்றல்ல. அவைகள் இரண்டாகும். அதற்கு சவால் விட்டு 1972ம் ஆண்டு தோழர் ரோஹண விஜேவீர, இப்படிக்கூறியிருக்கிறார். “இந்த முதலாளித்துவ சமூகத்தின் சட்டமுறை சம்பந்தமாக எனக்குள் இருப்பது என்னுடைய அனுபவங்களேயாகும். எனது அனுபவங்களின் அடிப்படையில் நோக்கும்போது இந்த சட்டத்தை பற்றிய நல்ல அபிப்பிராயம் எனக்கில்லை. அதேவேளை நீதி தொடர்பில் அதியுயர்ந்த நம்பிக்கை எனக்கிருக்கிறது. நீதி என்பது எனக்கு நன்றாகவே தெரியும். நியாயம் என்ன என்பதும் எனக்குத் தொ-ியும். தற்போதைய சமூக அமைப்புக்குள் சட்டம் வேறு நீதி வேறு சட்டமும் நீதியும் தனித்தனியானவை என்பதை நான் வாழ்ந்த குறுகிய காலத்தில் அறிந்துக் கொண்டேன். இந்த சமூகத்தில் சட்டத்திற்கு நீதியில்லை. நீதிக்கு சட்டமில்லை. (எம்மை அழித்தாலும் எமது குரல் ஓயாது தோழர் ரோஹண விஜேவீர)

இந்த சமூகத்தில் சட்டமும் நீதியும் இரண்டென்பதற்கு போதுமான உதாரணங்கள் பல உள்ளன. சமூக முறையின் தவறினால் சி-றிய தவறுகளுக்கு தண்டனை பெற்று கை குழந்தைகளுடன் அப்பாவி பெண்கள் சிறையில் துன்பப்படும்போது மூன்று கொலை-லகளின் குற்றவாளியாகி மரணத் தண்டனை விதிக்கப்பட்டிருந்த அமைச்சரொருவரின் மனைவி சர்வதேச பெண்கள் தினத்தன்று ஜனாதிபதி மன்னிப்பு பெற்று விடுதலையடைவதும், சரத் பொன்சேகா சிறையில் இருக்கின்ற போதேயாகும். முன்னாள் பயங்கரவாத தலைவர் கருணா பிரதி அமைச்சர் பதவி வகிப்பதும் கே.பி. போன்றவர்கள் இன்னமும் பொலிசுக்கு வாக்கு மூலம் கூட அளிக்காமல் உல்லாச வாழ்க்கை வாழ்வதும், உண்மையான கள்ளர்கள் மோசடிக்காரர்கள் சுதந்திரமாக நடமாடி அப்பாவி மக்களை சட்டத்திற்குள் நடவடிக்கை எடுக்கப்படுவதும் நீதியும் சட்டமும் ஒன்றல்ல இரண்டாக இருப்பதினாலாகும்.

அதனால் இப்போது தேவைபடுவது, அரசாங்கம் ஜனநாயகத்தை இல்லாதொழிக்கும்போது தலையில் கைவைத்து கவலைபடுவ-தோ சகல எதிர்பார்ப்புகளையும் சூன்யமாக்குவதல்ல. அல்லது இல்லாது போகும் ஜனநாயகத்தையு பற்றி ஓலமிடுவதாலல்ல. இதற்கு பதில் உண்மையான ஜனநாயகத்தை வென்றெடுப்பதற்காக போராடுவதேயாகும். தற்போதைய சமூகம் இவ்வாறு உள்ளபோது ஜனநாயகத்தை மட்டும் வென்றெடுக்கவோ பாதுகாக்கவோ முடியாது. எனவே, இப்போது தேவைப்படுவதெல்லாம் தற்போதைய அசாதாரண நீதியற்ற ஜனநாயக விரோத ஆட்சியாளர்களினால் கொண்டுச் செல்லப்படும் இந்த துஷ்டத்தனமான சமூக முறையை இவ்வுலகிலிருந்து துடைத்தெறிந்து புதிய சமூகத்தை உருவாக்குவதேயாகும். உண்மையான ஜனநாயகத்தை வென்றெடுக்க முடிவது, அதன் மூலமாகவேயாகும். அப்படியான சமூகத்தில் சட்டமும் நீதியும் இரண்டல்ல ஒன்றாகும். இல்லாது போய் கொண்டிருக்கும் ஜனநாயகத்தை வென்றெடுப்பதற்கான போராட்டம் சமூக மாற்றத்திற்கான போராட்டத்துடன் பிணைந்திருக்க வேண்டும். அந்தப் போராட்டத்திற்காக சகல சக்திகளையும் அணிதிரட்டுவது இன்றைய நாளில் பின்போட முடியாத கடமையாக உள்ளது.

# வட பகுதி மக்களை வரவேற்கும் புதிய அரசியல் கலாச்சாரம்!




முப்பது வருடங்களாக ஆயத கலாச்சாரத்திற்கு இரையாகிப் போயிருந்த வடபகுதி மக்களின் அரசியல் கலாச்சாரத்திற்கு ஆயுத முனைகள் கடிவாளமிட்டிருந்நன. ஆனால், தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகள், ஏக்கங்கள், அரசியல் தாகமாக-வே இருந்திருப்பதை இப்போது உணரமுடிகிறது.


ஆம் , கடந்த முப்பது வருடங்களுக்க மேலாக ஆயுத கலாச்சாரத்தால் கருத்து சுதந்திரம் பறிக்கபட்டிருந்தது. மிதவாத அரசியல்வாதிகளும் ஆயுத கலாச்சாத்திற்கு அடிபணிந்திருந்ததே தவிர மக்களின் அரசியல் தாகத்தை தணிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதில் தோல்வி கண்டிருந்நதனர். அதுமட்டுமல்ல, இவர்கள் தோல்விகண்டதுடன் நிற்காது மக்களையும் தோற்கடித்துள்ளனர். அதேபோல்கடந்த 63 வருடங்களாக ஆட்சிபிடத்தை அலங்கரித்த அனைத்து அரசாங்ககளும் அவற்றுக்கு முக்கு கொடுத்த சிறுபான்மையினரின் கட்சிகளும் மக்களை ஏமாற்றியுள்ளனர், வஞ்சிக்கப்பட்டுள்ளனர். எனவே அந்த ஏமாற்றுக்கு முடிவுகட்டும் காலம் இப்போது உதயமாகியுள்ளது. அதற்கான ஆரம்பமாக

இம்முறை நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தல் வரலாற்று முக்கியத்துவம் **வாய்ந்ததாகும். அதாவது மக்கள் விடுதலை முன்னணி** தனது வரலாற்றில் முதற் தடவையாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு வேட்புமனு தாக்கல் செய்து தேர்தலில் களம் இறங்கியுள்ளது. இது கடந்த காலத்தில் மக்களை ஏமாற்றிய அரசியல் வாதிகளின் வயிற்றில் புள-ியை கறைத்துள்ளது. அதன-ால் அவர்களின் வழமையான அவதுாறுகள் அள்ளி வீசப்படுகின்றன.

1965ம் ஆண்டு எமது கட்சி ஸ்தாபித்த நாளிலிருந்து ஓரிரு வரடங்கள் கடக்கும் தருவாயில் எமது கட்சியை அன்றை சி-றிமா பண்டாரநாயக்காவின் தலைமையில் பழைய இடதுசாரி கட்சிகளுடன் நிர்மாணித்த ஐக்கிய முன்னணி தடைசெய்ததன் காரணத்தில் எமக்கு பகிரங்க அரசில் நடவடிக்ககைகளில் ஈடுபட முடியாததினால் வடபகுதியிலும் அரசியல் நடவடிக்ககைகளை மேற்கொள்ள முடியாமற் போனது. இதன் போது எமது கட்சி தலைவர்களை சிறையிலடைக்கப்பட்டு மீண்டும் 1977 ம் ஆண்டிலேயே சிறைகளிலிருந்து விடுதலை பெறுகின்றனர். இதற்கு பின்பு நாம் மீண்டும் பகிரங்க அரசியலில் ஈடுபட்டாலும் தேர்தல்களிலே எமது கட்சியின் பதிவை ஏற்குகொள்ளாத காரணத்தினால் மணி சின்னத்தில் அன்றும் எமக்கு போட்டியிடுவதற்கு சந்தர்ப்பம் கிடைக்காத படியால் சுயேட்சையாக சில உள்ளூராட்சி சபைக-ளில் போட்டியிட்டு சில உறுப்பினர்களை வென்றெடுக்க முடிந்தது. பின்பு 1982ம் ஆண்டு நடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது எமது கட்சியின் ஸ்தா-பகரும் தலைவருமான தோழர் ரோகண விஜேவீர மணி சின்னத்தில் முதன் முறையாக போட்டியிடுகிறார். இதனால் இலங்கை தேர்தல் வரலாற்றில் ஓர் மாற்று கருத்தியல் ஆரம்பிக்கப்பட்டு நாடாலாவிய மட்டத்தில் குறிப்பாக வடக்கு கிழக்கு பகுதிகளில் கூட மாற்றத்தை விரும்பும் மக்களின் வரவேற்பை பெற்று மிகவும் குறுகிய காலத்தில், மிக ஊழல் மோசடிகளுக்கு மத்தியில் நடைபெற்ற தேர்தலில் கூட மூன்றாவது சக்தியாக மக்கள் மத்தியில் பிரபல்யமாகியது.

அதற்கு பிற்காலத்தில் எமது நாட்டில் மேலோங்கிய யுத்தச் சூழல் காரணமாக வடபகுதி மக்களுக்கு சுயாதீனமான அரச-ியலில் ஈடுபடுவதற்கு முடியாத சூழ்நிலையே காணப்பட்டது எனவே எமது கட்சி அரசியல் நடவடிக்கைகளையும் உரிய முறையில் வட பகுதிகளில் செயல்பத்துவதற்கு முடியாமற் போனது ஆகவே வடபகுத-ியில் எமது கட்சி அரசியல் நடவடிக்கைகளில் உரிய முறையில் ஈடுபட முடியாமற் போ-னது எமது கட்சியின் தனிப்பட்ட குறைபாட்டிலோ அல்லது எமது கொள்கைகளில் இருந்த தவறோ இல்லை என்பது இவ்விடயங்களை அறிந்த யாரும் ஏற்றுக்கொள்ளும் விடயமாகும்.

எனவே சுமார் 3 தசாப்தங்களாக நடந்த யுத்தம் முடிவடைந்துள்ள நிலையில் உள்ளூராட்சி சபை தேர்தலை நடாத்தும் இன்றை காலகட்டத்தலே வடப-புதியில 13 உள்ளூராட்சி சபைகளுக்கா வடபகுதி மக்களை பிரதிநிதித்துவம் செய்து எமது கட்சி போட்டியிடுகிறது. இது வடப-குதி மக்கள் பெற்று கொண்ட பெரும் வெற்றியாகவே நாம் கருதுகின்றோம். ஏனென்றால் யுத்தம் முடிந்த இரண்டு வருடங்களை அண்மித்து வரும் காலகட்டத்திலும் வட பகுதியில் ஜனநாயக உர-ிமைகள் வழங்கபட்டாது சிவில் நிர்வாகத்தை நிலைநாட்டாது, இராணுவ ஆட்சியையை காணக்கூடியதாகவுள்ளது. இது மட்டுமன்றி யுத்தத்தின் போது காணாமற் போனோர் பிரச்சினைக்கு உரிய தீர்வை வழங்குவதற்க இன்றைய ஆட்சிக்கு இன்னமும் முடியாமற் போயுள்ளது. பல வருடங்களாக தடுப்பு முகாம்களில் உள்ள பெரும்பாலானோர் எவ்வித சட்ட நடவடிக்கைகளையும் எடுக்காது தடுத்து வைத்துள்ளனர் மறுபுறம் இடம்பெயர்ந்த மக்களில் குறிப்பிட்டளவு மக்கள் இன்னமும் முகாம்களில் அல்லது பொது இடங்களில் காலத்தை கடத்தி வருகின்றனர் இல்லையேல் மீளக் குடியமர்வு என்ற பெயரில் கொட்டில்களில் வசித்து வருகின்றனர். இது மட்டுமன்றி வடபகுதி மக்கள் மீண்டும் பழைய நிகழ்வுகளை, அச்சுறுத்தல்களை நினைவூட்டும் வகையில் கொ-ாலை, கொள்ளை, கடத்தல்கள் போன்ற சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. எனவே மக்கள் முகம் கொடுக்கும் இவ் அனைத்து பிரச்சினைகளுக்கும் முடிவு கட்ட வேண்டியது நாம் அனை-வரினதும் பொருப்பாகும் என சுட்டிக்காட்டுகிறோம் அதன் முதற்கட்டமாக வட பகுத-ியில் இராணுவ கட்டுப்பாட்டை நீக்கி சிவில் நிர்வாகத்தை நிலைநாட்டி ஜனநாயக உரிமை வழங்குவது முதன்மையெனக் கருதுகின்றோம். இதன் பின்பு கடந்த 63 வருடங்களாக மேற்கொண்ட பொருளாதார முறைக்கு பதிலாக மக்கள் மய பொருளாதாரக் கொள்கையை கொண்டுவருவதனுாடாக அனைவருக்கும் செழிப்பாய் வாழ்வதற்கான சூழலை நிர்மாணிக்க முடியும் இதற்கமைய காணாமாற் போனொர் பிரச்சினைக்கு உரிய தீர்வை வழங்குவதற்கு அரசை நிர்பந்திப்பதற்கு, தடுத்து வைத்துள்ளோர் குறித்து விசார-ணை நடத்தி உரிய தீர்வை வழங்குவதும், இடம்பெயர்ந்த முகாம்களில் உள்ளோர் உட்பட மீளக்குடியமர்த்தியோர் பிரச்சினையை உகந்த வகை-கயில் தீர்ப்பதற்கு அரசை நிர்பந்திப்பதற்கு. இது மட்டுமன்றி மீண்டும் ஒரு யுத்தம் உறுவாகாமல் இருப்பதற்கு இனங்களுக்கிடையே தேசிய ஒற்றுமையை கட்டியெழுப்பி தகங்களது கலை, கலாச்சரங்களின் தனித்துவத்தை பேணி அவற்றுக்கு மதிப்பழிக்கும் ஆட்சியை நிலைநாட்ட வேண்டும். எனவே குறிப்பிட்ட மாற்று ஆட்சியை கொண்டு வருவதற்கான ஆரம்ப அடியை இத்தேர்தலிலே மக்கள் வைக்க வேண்டும் என்று வடபகுதி மக்களை நாம் கோரிநிற்கிறோம்.



# முடிவு கட்ட வேண்டிய ஏமாற்று அரசியல்!

நாம் இந்த குறிப்பினை எழுதுவது உள்ளூராட்சி சபைத் தேர்தல் அருகிலிருந்தாகும். உள்ளூராட்சி சபைத் தேர்தலை அறிவித்தவுடன் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்படுவதற்கு முன்னரே கடந்த காலங்களில் நாட்டை ஆண்ட கட்சிகளின் பிரதிநிதிகள் மதில் சுவர்களை குத்தகைக்கு வாங்கி மக்களை பார்த்து பல் இழித்துக் கொண்டிருக்கின்றனர். பல வகையான புதினமான வாக்குறுதிகள் மற்றும் மேற்கோள்களை அறிவிக்கின்றனர். வரலாறு முழுவதும் இப்படியான பொய்காரர்களுக்கு வஞ்சகர்களுக்கு அவர்களின் பொய்யான அரசியலுக்கு ஏமாந்துள்ள மக்கள் மீண்டும் இப்படியான ஏமாற்றுகாரர்களுக்கும் அவர்களின் ஏமாற்று அரசியலுக்கு இரையாக வேண்டியதில்லை. இப்போதாவது ஏமாற்றுக்கு முடிவுகட்டி புதிய பாதையில் புதிய அரசியல் தீர்மானங்களை எடுப்பதற்கு புத்தியுடையவர்களாக வேண்டும். ஆற்றலுடையவர்களாக வேண்டும்.

குட்ட குட்ட குனிபவனும் குனிய குனிய குட்டுபவனும் இரண்டு பேரும் முட்டாள்கள் என்ற பழமொழியொன்று உள்ளது. நமது நாட்டில் 63 வருட அரசியலுடன் ஒப்பிடுகையில் மக்களை ஏமாற்றுவோர் மடையர்களல்ல வஞ்சகர்கள், துஷ்டத்தனமானவர்கள் என்றபோதிலும் மக்கள் தொடர்ச்சியாக ஏமாற்றத்திற்கு உள்ளாவதென்பது மனித அறிவினை எள்ளி நகையாடும் விதத்திலான பலவீனமாகும். குழியில் விழுவது மூளைக்கு நல்லதென்று ஒருமுறை மாவோ சேதுங் கூறியுள்ளார். ஆனால் நமது நாட்டு அரசியலில் இரவு விழுந்த குளியில் பகலிலும் விழுந்தோமே தவிர அதனை படிப்பினையாக கொண்டு அதை மூளைக்கு எடுத்துக் கொண்டதாக தெரியவில்லை.

இலங்கை போன்ற பின்தங்கிய பலவீனமான முதலாளித்துவ முறை மக்களுக்கு பெற்றுக் கொடுக்க முடிவது வாக்குறுதிகள் மற்றும் எதிர்பார்ப்புகளைத் தவிர உண்மையான வாழ்க்கையை அல்ல. இந்த பலவீனமான முதலாளித்துவத்தினுள் பொருளாதார ரீதியாக போன்றே கலாச்சார ரீதியிலும் வறுமைக்குள்ளாகி, பொருளாதார வறுமையின் பாதாளத்திற்கே வீழ்ந்து அதனால் கருத்தியல் ரீதியிலான வறுமைக்குள்ளாகியுள்ள மக்களை இலகுவாக ஏமாற்றத்திற்கு உள்ளாவதுடன் மக்களின் அந்த தன்மையை தமக்கு சாதகமாக்கி கொண்டு அதிகாரத்திலிருப்பதற்கு முதலாளித்துவ ஆட்சியாளர்களால் முடியுமாயிருக்கிறது. வரலாறு முழுவதும் இடம்பெற்ற ஏமாற்று அரசியல் கற்பிக்கும் பாடம் இதுவாகும். தமது ஏமாற்று அரசியலை நிறுத்துவதற்கு முதலாளித்துவ ஆட்சியாளர் ஒருபோதும் தயாரில்லை. அதனால் ஏமாறுவதிலிருந்து மீளவேண்டியதும், ஏமாற்று அரசியலுக்கு முடிவு கட்டி புதிய அரசியல் பயணத்திற்காக தயாராக வேண்டியது மக்களேயாகும். இடதுசாரிகள் மற்றும் முற்போக்கு இயக்கங்களின் பொறுப்பானது அதற்காக மக்களுக்கு வழிகாட்டுதலாகும். அறிவினை பெற்றுக் கொடுப்பதாகும். நம்பிக்கையையும் சக்தியையும் பெற்றுக் கொடுத்து நம்பிக்கையை ஊட்டுவதாகும்.

நினைவிலுள்ள வரலாறு முதல் இந்நாட்டு ஆட்சியாளர்கள் மக்களை ஏமாற்றியுள்ள விதத்தினை பற்றிய உதாரணங்கள் போதுமான அளவு உள்ளது. விசேடமாக தேர்தல் காலங்களில் வழங்கப்படும் உறுதிமொழிகள் அதற்கான சான்றாகும். வாழ்க்கையில் கவலை, கஷ்டமான நிலைக்கு முகம்கொடுத்துள்ள ஒடுக்கப்பட்ட மக்கள் எப்போதும் எதிர்காலம் நலமாக அமையுமென நம்புகின்றனர். அவர்கள் தாங்களது கவலைக் கஷ்டமான வாழ்க்கையை தாங்கிக் கொள்வது நாளைய தினத்தை பற்றிய வைத்துள்ள அந்த நம்பிக்கையினாலாகும். இந்த நிலைமையை தமக்கு சாதகமாக்கிக் கொள்ளும் ஆளும் வர்க்கத்தினர் மக்கள் மத்தியில் மாறி மாறி நம்பிக்கையை ஏற்படுத்துகின்றனர். இன்றை விட நாளை பற்றிய கனவை வளர்க்கின்றனர். பொய் வாக்குறுதி அளிக்கின்றனர். எதிர்பார்ப்புகள் சிதையும்போது புதிய வாக்குறுதிகளால் புதிய எதிர்பார்ப்புகளை வளர்க்கின்றனர். மக்கள் கனவுலகில் மிதக்கும்போது முதலாளித்துவ ஆட்சியாளர்கள் தாங்களது சொகுசு வாழ்க்கையை நலமாக அனுபவிக்கின்றனர். இந்த வாக்குறுதி அரசியலில் மக்கள் எவ்வளவு தூரம் ஏமாற்றப்பட்டிருக்கிறார்கள் என்றால் நம்ப முடியாத விதத்திலான வாக்குறுதிகளையும் நம்புகின்ற நிலைக்கு உள்ளாகியுள்ளனர்.

அண்மைக் காலத்து உதாரணங்களாக, 1970 தேர்தலில் ஸ்ரீ.ல.சு. கட்சி உள்ளிட்ட ஐக்கிய முன்னணி பெற்றுக் கொடுத்த வாக்குறுதியாகும். அதன்போது அதற்கு முன்னர் இருந்த கட்சி சேனாநாயகவின் ஐ.தே.க. அரசாங்கம் மக்களுக்கு மானியமாக பெற்றுக் கொடுத்த இரண்டு கொத்து அரிசியில் ஒரு கொத்து வெட்டப்பட்டிருந்தது. இதனால் முன்னர் கிடைத்த இரண்டு கொத்து அரிசியை மீண்டும் பெற்றுக் கொள்வது மக்களின் தேவையாக இருந்தது. இதை தமது பிரதான தேர்தல் வாக்குறுதியாக மாற்றிக் கொண்ட சிறிமாவோ பண்டாரநாயக்க, அதற்கிணங்க "சந்திர மண்டலத்திலிருந்தாவது இரண்டு கொத்து அரிசி" பெற்றுத் தருவதாக கூறியதுடன் மக்களும் அதை நம்பி ஐக்கிய முன்னணியை ஆட்சிப்பீடமேற்றினர்.

ஆனால் மக்களுக்கு கிடைத்ததோ இரண்டு கொத்து அரிசியல்ல. அரிசி மற்றும், மிளகாய் பஞ்சப்பட்டியலாகும். சந்திரனில் அரசியில்லை என்பதை சிந்திக்கும் அளவுக்கு மக்கள் அக்கறை கொள்ளவில்லை.

ஐக்கிய முன்னணியில் 07 வருட ஆட்சியின்போது மக்கள் பட்ட கஷ்டங்கள் (விசேடமாக உணவு பிரச்சினை)யை தமக்கு சாதகமாக பயன்படுத்திய ஜே.ஆர். ஜயவர்த்தன 1977ல் புதிய வாக்குறுதிகளை நிர்மாணித்து எல்லோருக்கும் வாரத்திற்கு எட்டு றாத்தல் தானியம் தருவதாக கூறினார். இரண்டு கொத்து அரிசி வாக்குறுதி ஏமாற்ற கோபத்திலிருந்த மக்கள் மீண்டும் இந்த புதிய வாக்குறுதியை விழுங்கினர். ஆனால் நடந்தது கூப்பனை பறித்தமையாகும். ஜயவர்த்தனவின் தார்மீக சமுதாயம் பற்றிய வாக்குறுதியும் 1994ல் திறந்த பொருளாதாரத்திற்கு மனிதாபிமான தோற்றத்தைக் கொடுக்கும் சந்திரிகா அம்மையாரின் வாக்குறுதிகளும் ஏமாற்று என்பதற்கு தலைக்கு மேலான சான்றுகள் உள்ளன.

மகாவலி அபிவிருத்தித் திட்டத்தை, ஆரம்பித்து அது பற்றி ஐ.தே.க. விதைத்த ‘கனவு’ நனவாகியிருக்குமானால் இன்று எமது நாடு உலகத்தில் முதலாம் இடத்தை வகிக்கும் விவசாய நாடாகியிருக்க வேண்டும். இந்தியாவுக்கு மின்சாரத்தை வழங்கும் நாடாக, ஆனால் நடந்திருப்பதோ, இந்தியாவிலிருந்து மின்சாரம் மட்டுமல்ல அரசியும் கொண்டுவரும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம். அதற்கு முன்னைய சிறிமா பண்டாரநாயக்க அரசாங்கத்தில் "வகா சங்கிராமய"(விவசாயத்தை மேம்படுத்தும் திட்டம்) வெற்றி பெற்றிருக்குமானால் இன்று எமது நாடு முழு உலகத்திற்கு அரிசி ஏற்றுமதி செய்யும் நாடாகியிருக்கும். இவைகள் அனைத்தும் தமது பதவிகாலத்தை கடத்திக் கொள்ளும் கண்கட்டி வித்தைகளாக இருப்பதுடன் இறுதியாக நாட்டிலிருந்த விவசாயத்துறை அழிந்துபோய் நாட்டை கடன்பொறியிலும் மக்களை வரி சுமையாலும் பிழியப்பட்டுள்ளனர்.


வாக்குறுதி அறிக்கையில், கனவுகளை வளர்க்கையிலும் ஏமாற்றுவதில் மற்றும் ஆட்சியாளர்களை மிஞ்சுவதில் 05 வருடத்தில், மஹிந்த ராஜபக்ஷ சித்தியடைந்துள்ளார். மஹிந்த ராஜபக்ஷ வழங்கிய ஆயிரக்கணக்கான வாக்குறுதிகளில் ஒரு சிலவற்றை நினைவூட்டுவது போதுமானதாகும். தமது முதலாவது பதவிகாலம் முடிவடைய முன்னர். நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பதாக 2005 ஜனாதிபதித் தேர்தலில் அளித்த வாக்குறுதியும், அரச ஊழியரின் சம்பளத்தை 2500 ஆல் அதிகரிப்பதாக கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கொடுத்த வாக்குறுதிகள் இவை பிரதானமானவையாகும்.

விலைவாசியை குறைப்பதாக அளித்த வாக்குறுதி, யுத்தத்தை வென்றதுபோல் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதாக மக்களுக்கு உணரும்படியான அபிவிருத்தி செய்வதாக வழங்கிய வாக்குறுதி, ஊழல், மோசடியை நிறுத்துவதாக அளித்த வாக்குறுதி, கர்ப்பிணி தாய்மார்களுக்கு போஷாக்கு பொதியொன்றை தருவதாக கூறிய வாக்குறுதி, 05 வயதுக்கு குறைவான பிள்ளைகளுக்கு பால் வழங்குவதற்காக மாதமொன்றுக்கு 200.00 மானியமாக தருவதாக அளித்த வாக்குறுதி, அமைச்சரவையை 38 ஆக குறைப்பதாக அளித்த வாக்குறுதி போன்று வாக்குறுதி பொதியல்ல வாக்குறுதி மலையை மீறிய வாக்குறுதிக்கான சேர்ப்பதை தவிர வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் ராஜபக்ஷ ஆட்சியோ நலிவடைந்த முதலாளித்துவமோ வெற்றியடையவில்லை.

நாட்டில் தேசியப் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதாக, தேசியத்துவத்திற்கு முதலிடமளிப்பதாக சவடால் விட்ட ராஜபக்ஷ ஆட்சி" நாம் வளர்ப்போம் - நாட்டை கட்டியெழுப்புவோம்" எனும் திட்டத்தை அறிமுகப்படுத்திய ராஜபக்ஷ ஜனாதிபதி அவர்கள் வயலுக்கு இறங்கி ஏர்பூட்டு விழாவினையும் நடத்தினர் இவைகள் அனைத்தையும் ஏமாற்றாக மாற்றி சுற்றுலாத் துறைக்கு பொருளாதாரத்தில் முதலிடமளித்து உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் வழிகாட்டலின் கீழ் நாட்டின் பொருளாதாரம் நவ லிபரல்வாதத்துடன் கட்டிபோடப்பட்டுள்ளது. ஒழுக்க விழுமியங்களுடனான நாட்டை உருவாக்குவதாக கூறி சுற்றுலாத் துறைக்காக கெசினோ சட்டத்தை நிறைவேற்றி சூதாட்டம், மது, மாது போன்றதுடன் விபச்சாரத்துடனான ஒழுக்கமற்ற பொருளாதாரத்திற்கு அடித்தளமிடப்பட்டுள்ளது. மதுவுக்கு முற்றுப்புள்ளியெனக் கூறிக் கொண்டு வெளிநாட்டிலிருந்து மதுவகைகளின் இறக்குமதியை அதிகரித்து, மதுபாணங்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளது. அது ஏமாற்று அரசியலை ராஜபக்ஷ வெற்றிகரமாக கொண்டுச் செல்லும் விதமாகும்.

அது மட்டுமல்ல மரக்கறிகளின் விலை தாங்க முடியாத அளவு அதிகரிக்கும்போது அதற்கு தீர்வில்லாத அரசாங்கம் இராணுவத்தினரின் மூலமாக குறைந்த விலைக்கு மரக்கறி விற்பனையெனும் தோல்வியடைந்த நடவடிக்கைகள் மூலமாக பிரச்சினையிலிருந்து மக்களை ஏமாற்றி வருகிறது. தேங்காய் விலை அதிகரிக்கும்போது இந்தியாவிலிருந்து தேங்காய் கொண்டுவருவதாக கூறிய கதையும் ஏமாற்று விதையாகும்.

தொடர்ச்சி 10ம் பக்கம்




# ஆட்சிசெய்த அனைத்து கட்சிகளும் தோட்டதொழிலாளர்களை ஏமாற்றினர்!

**ஊவா மாகாணச் சபை முன்னால் உறுப்பினர் தோழர் பூமிநாதன்'.**



தோட்டதொழிலாளர்களுடை இன்றைய நிலைமைகள் எவ்வாறு,

பூமிநாதன்:- மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் இன்று பாரிய பொருளாதார, சமூக நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளார்கள். வாழ்வதற்கு போதுமான வருமானம் கிடையாது. கிடைக்கின்ற சம்பளமோ 285 ரூபாய். இன்றைய பொருட்களின் விலைகள் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமுள்ளது. தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கையைப் பற்றி சிந்திப்போர் யாருமில்லை. வரலாற்றில் ஆட்சி பீடமேறிய அனைத்து அரசாங்கங்களும் இவர்களை ஏமாற்றியதையே வரலாறாக உள்ளது. அந்த வரலாற்றில் மஹிந்த ராஜபக்ஷ அவர்களும் இடம்பிடித்துள்ளார். அது அவர் மஹிந்த சிந்தனையின் மூலமாக தோட்டத் தொழிலாளர்களுக்கு கே-ாதுமை மானியம், அரிசி, மண்ணெண்ணை மானியம், 7 பேர்ச் காணி போன்ற பல வாக்குறுதிகளை ஜனாதிபதித் தேர்தலின்போது வழங்கினார் அவைகளின் ஒன்றையேனும் நிறைவேற்றப்படாத நிலையே உள்ளது. தோட்டத் தொழிலாளர்களின் உழைப்பையும் உதிரத்தையும் சுரண்டும் இவர்கள் அவர்களுக்கான வசதி வாய்ப்புகளை பெற்றுக் கொடுக்கவில்லை. இது கவலைக்கிடமான நிலையாகும். இந்த நிலமைகளை மக்கள் இந்த தேர்தலில் உணர்ந்து முடிவெடுப்பார்கள் என்று நம்புகிறோம்.

செஞ்சக்தி:- மலையகத் தலைவர்கள் ஏதாவது மாற்றத்தை கொண்டு வருவார்கள் என்று நம்புகிறீர்களா?

பூமிநாதன்:- இல்லை. முற்றாக இல்லை மலையக வரலாற்றை பார்க்கும்போது மலையக தலைவர்களால் மலையகத்திற்கு மாற்றத்தை கொண்டு வரமுடியாது. காரணம் அவர்களே, இதுநாள்வரையில் அவர்களின் மீட்பாளர்களாக இருந்தார்கள். ஆனால் அவர்கள் சாதித்தது எதுவும் கிடையாது. பதவி ஆசை, பண ஆசை, அதிகார ஆசையுடன் செயற்படும் இவர்கள் தோட்டத் தொழிலாளர்களை பகடைகாய்களாக நகர்த்தி வருகின்றனர். தேர்தல் காலங்களில் மக்களை ஏமாற்றி, பொய்யான வாக்குறுதிகளை வழங்கி தொடர்ச்சியாக ஏமாற்றியுள்ளதுடன் மலையக அரசியல் வாதிகள் தாங்களுக்கு அமைச்சுப்பதவி சொகுசு வாழ்க்கையை ஏற்படுத்திக் கொண்டார்களே, தவிர மக்களின் வாழ்க்கையில் மாற்றத்தை கொண்டுவரவில்லை. அதனால் மலையக அரசியல், தொழிற்சங்கவாதிகள் இன்று செல்லாகாசாகியுள்ளனர். மக்களை ஏமாற்றும் இவர்களுக்கு மலையக மக்களின் பிரச்சினைகளை தீர்க்க முடியாதென்பது வரலாறு போதுமான சான்றுகளை அளித்துள்ளது. மக்களை ஏமாற்றிய இவர்களுக்கு இந்த தேர்தலில் மக்கள் நல்ல பாடத்தை புகட்டுவார்கள் என்று நம்புகிறேன்.

செஞ்சக்தி:- ஏமாற்றத்துக்கு முடிவு புதிய பாதையின் ஆரம்பம் ஜே.வி.பியின் சுலோகம் மலையக மக்களுக்கு மாற்றத்தை கொண்டுவருமா?

பூமிநாதன்:- நிச்சயமாக இந்த சுலோகம் முழு நாட்டு மக்களுக்கும் ஏற்புடையதாகும். இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்து 63 வருடங்களாகிறது. இதன்போது தேர்தல்களில் மக்களை ஏமாற்றும் போலி வாக்குறுதிகளே, வழங்கப்பட்டுள்ளது. சிறிமாவின் சந்திர மண்டலத்திலிருந்து அாிசி கொண் வருவதிலிருந்து, ஜே.ஆரின், எட்டு றாத்தல் தானியம், சந்திரிகாவின் மனித முகம், மஹிந்தரின் 2500 சம்பள அதிகரிப்பு போன்றவை உள்ளிட்டு இது போன்று ஆயிரக்கணக்கான வாக்குறுதிகள் இன்று மலையேறியுள்ளது.

அதனால் இந்த ஏமாற்றுக்கு முடிவுகட்ட வேண்டும் எமது எதிர்கால பரம்பரை வளமான வாழ்க்கையை பெற வேண்டுமென்றால், ஏமாற்று அரசியலுக்கு விடைகொடுத்து புதிய பாதையில் அடியெடுத்து வைத்தாக வேண்டும். அதுதான் மக்களை ஏமாற்றாத, மக்களுக்காக போராடும், அர்ப்பணிப்பு தியாகம் அனைத்தையும் தன்னகத்தை கொண்ட மக்கள் விடுதலை முன்னணியுடன் அணிதிரள வேண்டும். அதற்காக இந்த சிறிய தேர்தலில் பெரிய மாற்றத்தை செய்தாக வேண்டும். அதற்காக மக்கள் விடுதலை முன்னணியின் சின்னமான மணி சின்னத்திற்கு வாக்களிக்க வேண்டும் என மக்களை நாம் வினயமாக வேண்டிக்கொள்கின்றோம்.

# தொடர்ந்தும் வாக்குறுதிகளுக்கு மக்கள் ஏமாறமாட்டார்கள்

**ஹல்தெமுல்ல பிரதேச சபையின் முன்னால் உறுப்பினர் தோழர் கிட்ணன் செல்வராஜா**

செஞ்சக்தி:- வாழ்க்கை செலவு உயர்வு வேலையில்லா பிரச்சினை, உள்ளிட்ட பல பிரச்சினைகளால் மக்கள் பீடிக்கப்படுகையில் தற்போதைய உள்ளூராட்சி சபைத் தேர்தலில் மக்கள் எப்படியான முடிவுகளை எடுப்பார்கள்?

**செல்வா:-** முன்னர் இருந்த அரசாங்கங்களைப் போலவே ஜனாதிபதி மஹிந்தரின் ஆட்சியும் தம்மை நன்றாகவே ஏமாற்றியுள்ளனர் என்பதை இப்போது இலங்கை வாழ் தமிழ்,சிங்கள,முஸ்லிம் மக்கள் நன்கு உணர்ந்துள்ளனர். ஆகவே இம்முறை உள்ளூராட்சி சபைத் தேர்தலிலும் புள்ளடி களியாட்டமென்று மக்களுக்கு நன்றாகவே விளங்கியுள்ளது. ஜனாதிபதி தேர்தல் மேடைகளில் பிக்குமார்களின் முன்னணியில் அரச ஊழியர்களுக்கு 2500 சம்பளத்தை அதிகரிப்பதாக உறுதியளித்திருந்தார். அது இன்று சந்திர மண்டலத்திலிருந்து அரிசி வாக்குறுதியாக மாறியுள்ளது. இதுவும் "ராஜபக்'வின் 2500" ஒன்று மக்கள் கூறுகின்றனர்.

விலைவாசியும் இதனைபோன்றதாகும். இலங்கைக்கு வெளிநாட்டிலிருந்து கொண்டுவருவது தடையென்பதை தெரிந்துக்கொண்டும் தேங்காயை வெளிநாட்டிலிருந்து கொண்டுவருவதாக சவால் விட்டனர். ஆனால் இது மக்களை ஏமாற்றும் நாடகமென்பது மக்களுக்கு நன்றாகத் தெரியும். கூட்டமைப்புக்கு (மஹிந்தரின்) வேறு தனிப்பட்ட காரணங்களால் வாக்களிக்கும் வாக்காளர்களும் இவர்கள் கள்ளர்கள் சொல்வதெல்லாம் பொய் என்று கூறுகின்றனர். இன்று மரக்கறிகளின் விலைகள் உயரும்போது மக்களின் கோபத்தை தணிக்க மக்கள் கேலி செய்கின்றனர். இராணுவத்தை விட்டு மரக்கறிகளை விற்பது அதனாலாகும்.

செஞ்சக்தி:- வடக்கில் ஜனநாயகம் பாரிய கேள்விக்குறியாக உள்ளது இது தொடர்பாக உங்கள் கருத்து?

செல்வா:- கடந்த காலங்களில் ஆட்சிபீடமேறிய அனைத்து ஆட்சியாளர்களும் தாங்களது இருப்பினை தக்கவைத்துக் கொள்வதாகவே வடக்கு தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளை பறித்தனர். இளைஞர், யுவதிகளின் வாக்களிக்கும் உரிமையை பறித்தனர். கல்வி கற்கும் உரியை பதித்தனர். இதன் விளைவாகவே கடந்த 30 வரும் கவவைக்கிடமாக உள்ளது.

யுத்தம் முடிந்த பின்னராவது ஜனநாயகம், சம வாய்ப்புக்காக பெற்றுக்கொடுப்பதற்காக நடவடிக்கைகளை எடுத்து இனங்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்துவதில் அரசாங்கம் தோல்வி கண்டுள்ளது, இவைகள் இப்படியே தொடருமானால் அதன் விளைவுகள் எதிர்காலத்தில் பாாிய பாதிப்பினை கொண்டுவரும் அதனால் வடக்கு மக்களின் ஜனநாயக குரலை நசிக்கும் சர்வாதிகார போக்கை தோற்கடிப்பதற்கான ஜனநாயக, மக்கள் சக்தியான மக்கள் விடுதலை முன்னணியை பலப்படுத்த எதிர்வரும் தேர்தலில் மக்கள் விடுதலை முன்னணியின் சின்னமான மணி சின்னத்திற்கு வாக்களிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

கடைசியாக இராணுவத்திற்கு சம்பளம் கொடுப்பதற்கும் அவர்களின் வாகனங்களுக்கு பெற்றோல் நிரப்புவதற்கும் மக்களின் பணத்தை வேறு வழியில் மக்களிடமிருந்து அறவிடுகின்றனர். வரிசையாக சென்று மரக்கறிகளை வாங்கும் மக்கள் இது பொய்யென்று நன்றாக உணர்ந்துள்ளனர். தேர்தல் காலங்களில் வேலை வாய்ப்பு பெற்றுத் தருவதாக கூறுகின்றனர். மக்கள் சபை செயலாளர்களை நியமிப்பதாக கூறினர். தேர்தலில் பேசப்பட்டவை இன்று எதுவுமே கிடைக்கவில்லை. எனவே இந்த சிறிய தேர்தலை ஒரு பெரிய மாற்றத்திற்காக பயன்படுத்தியாக வேண்டும் என நாங்கள் நம்புகிறோம். அதற்கான முதல் அடியை மக்கள் வைப்பார்கள்.

செஞ்சக்தி:- நிறைவேற்று ஜனாதிபதிபதவியும், பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ராஜபக்ஷ வசமுள்ள போதிலும், ஒரே தடவையில் நாடு முழுவதும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை நடத்தவில்லை. இது ஏன்?

செல்வா:- உண்மையில் அரசாங்கத்திற்கு பாதகமான இடங்களிடையே தேர்தலை பின்போட்டுள்ளது. குறிப்பாக நகரத்தை அண்மித்த பிரதேசங்களில் அரசாங்கத்திற்கு பாதகமானது. இதன் காரணமாக இப்பிரதேசங்களில் அரசாங்கம் தேர்தலை பின்போட்டுள்ளது.

தேர்தலை பின்போடுவதற்காக அரசாங்கம் பயன்படுத்திய மிக எளிமையான உத்தி உலக கிாிகெட் போட்டிகளாகும். கொழும்பிற்கு அண்மையில் உள்ள பிரதேச சபைகளில் தேர்தலை பின்போடுவதும் தூர இடங்களில் உள்ள நகர சபைகளில் தேர்தலை பின்போடுவதிலிருந்து இதை காணமுடியும். அந்த தர்க்கம் கேலிக்கிடமானதாகும்.


செஞ்சக்தி அண்மைக்காலமாக வடக்கில் தொடர்ச்சியாக இடம்பெறும் வேன் கடத்தல் போன்ற சம்பவங்கள் அதிகரித்ததே இதற்கான காரணம் என்ன?

செல்வா:- ஆம்! கடந்த 30 வருட யுத்தத்தின் பின்னர் இன்று யுத்தம் முடிவடைந்து 2 வருடங்களை அண்மித்துள்ளது. யுத்தம் முடிந்த பின்னர் வடக்கில் சுமூக வாழ்க்கையை ஏற்படுத்துவதில் அரசாங்கம் தோற்றுள்ளது. மக்கள் அமைதி காற்றை எதிர்பார்த்திருந்த சந்தர்ப்பத்தில் இன்று யாழ் மண்ணில் சூறாவளி வீசும் சூழலை மக்கள் எதிர்கொண்டுள்ளனர். அதாவது நீங்கள் மேற்கூறிய கொலை, கொள்ளை, கடத்தல், கற்பழிப்பு சம்பவங்கள் அதிகரித்துள்ளது, இவைகளுக்கு காரணமானவர்களை கண்டுபிடிப்பதில் அரசாங்கம் தோல்விகண்டுள்ளது. மொத்தமாக அரசாங்கத்தினால்

10ம்பக்கம்...

# வரிச்சுமை விலைவாசி ஏற்றத்துக்கும் கண்டனம்!

ராஜபக்ஷ அரசு பதவியேற்று ஆறுவருடங்களை தாண்டும் இச்சந்தர்ப்பத்தில்,எமது நாட்டு மக்கள் வரலாற்றில் என்றும் முகம் கொடுக்காத அளவுக்கு பொருளாதார நெருக்கடிக்கு முகம்கொடுத்துள்ளனர். கடந்த காலங்களில் கையாளாகாத ஆட்சியாளர்கள் யுத்தத்தை காரணம்காட்டி தமது இயலாமையை மூடிமறைத்துக்கொண்டனர்.




தற்போது யுத்தம் முடிவடைந்த சூழலில் முதலாளித்துவ அரசுகளின் இயலாமையை வெளிப்படையாகக் காணக்கூடியதாக உள்ளது. தற்போதைய நெருக்கடிகள் மேலும்,மேலும் உக்கிரமடைவதற்கு மஹிந்த அரசின் தொலைநோக்கற்ற செயற்பாடுகள் காரணமாகிறது.

அனைத்து அத்தியாவசியப் பொருட்களினதும் விலைகள் அதிகரித்துள்ள அதேவேளை விலைகளை கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு பொருளாதார நெருக்கடி உக்கிரமடைந்துள்ளது. வாழ்க்கை சுமை கட்டுமீறிச் செல்லும் போது பெருந் தொகையான அமைச்சரவையினதும் ராஜபக்ஷ அரசின் கலியாட்டச் செலவுகளின் சுமையும் மக்களே சுமத்தவேண்டியள்ளது. எனவே, விலைவாசி மற்றும் வரிச் சுமை அதிகதித்துள்ளதற்கு எதிராக மக்கள் விடுதலை முன்னணி நாடெங்கும் பாரிய கண்டன நடவடிக்கைகளை நடாத்த ஏற்பாடு செய்துள்ளதுடன் இதன் ஆரம்ப நடவடிக்கை ஜனவரி மாதம் 06ம திகதி இடம்பெற்றது. நாடெங்கும் நகரகங்களிலும் குறித்த கிராமப்புறங்களிலும் ஒரே நேரத்தில் இந் நடவடிக்கைகள் நடைபெற்றதோடு இந் நிகழ்வுகளில் மக்கள் விடுதலை முன்னணியின் அனைத்து தலைவர்களும் கலந்து கொண்டனர். கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்துக்கு முன்பாக இடம்பெற்ற நிகழ்வில் மக்கள் விடுதலை முன்னணி தலைவர் தோழர் சோமவன்ச அமரசிங்க, பிரதான செயலாளர் தோழர் ரில்வின் சில்வா பிரச்சாரச் செயலாளர் தோழர் விஜித ஹேரத் அரசியற் குழு அங்கத்தவர்களான அநுர திசாநாயக்கா, கே. டீ. லால்காந்த தோழர்களும் மத்திய குழு அங்கத்தவர்களான பிமல் ரத்னாயக்க, சுனில் ஹந்துன் நெத்தி ஆகிய தோழர்களும் கலந்து கொண்டனர்.

இதன்போது பெரும் மக்கள் வரவேற்பு இச் சந்தர்ப்பத்தில் கிடைத்ததோடு இது எதர்காலத்தில் ராஜபக்ஷ அரசையும் முதலாளித்துவ ஆட்சியையும் தோற்கடிக்கும் பரந்தளவிலான மக்கள் எழுச்சிக்கு வலிசமைத்துகின்றதையும் தெளிவாக காணக்கூடியதாகவுள்ளது

# காலனிச் சத்தங்கள்



என் செல்ல மகளே!
நீ பிறந்ததில் எனக்கு
மிக்க மகிழ்ச்சி,
உன் தாத்தாவுக்குத் தான்
என் மீது கொஞ்சம் வருத்தம்.
குலசாமி பெயர் விடுத்து,
மரித்தவர்களின் ஊர்ப்பெயரை
உனக்கு சூட்டியதற்காக...

முடிந்தவரை விளக்கிவிட்டு
பிடிவாதமாய்,
வெண்மணி என்றே உனக்கு
பெயரிட்டு விட்டேன்.
என்னைப் பொறுத்தவரை அவர்கள்
மரிக்கவில்லை.

நகர வாழ்வின் விழுமியங்களோடு
சங்கமித்து நிறைய வருடங்கள்
உருண்டோடி விட்டன.
அதன் தொடர்ச்சியாய் - இப்பொழுது
நீயும் வந்து விட்டாய்...
கடந்து வந்த தூரங்களின்
நீளத்தை என்றாவது ஒருநாள்-நீ
கேட்டறிய வேண்டும் என்பதே
என் ஆவல்.

ஏனெனில்,
தழும்புகளற்ற காயங்கள்
என்னிடம் நிறைய உண்டு.
அதை உன்னோடு பகிர்ந்து
கொள்ளும் போது
உனக்குள் ஒரு பண்பு மாற்றம்
நிகழலாம் என்பது என் நம்பிக்கை.

முரண்களின் மூட்டையாக
இருக்கும் இந்த சமூக அமைப்பின்
சிக்கல்களை
அறுத்தெறிவதற்கான ஆயுதமாக...
அந்த நம்பிக்கை
உனக்குள்ளும் ஊடுருவலாம்.

அழிகிய ஓவிய வேலைப்பாடுகளடங்கிய
பீங்கான் குவளைகளில், நீயும் நானும்-
இப்பொழுது
தேநீர் அருந்திக் கொண்டிருக்கிறோம்,
இவை நாம் எட்டிய
குறைந்தபட்ச வாழ்க்கை,
இது நடந்தது கூட
உடனடி நிகழ்வல்ல?
ஒரு நெடிய போராட்டத்தின்
விளைவு.

பனை மரத்து ஓலைகள்.
செரட்டைகள்,
அலுமினியக் கிண்ணங்கள்...
இவைகள்தான்
உனது முன்னோர்களின்
தேநீர்க் குவளைகள்
அதாவது,
"நாகரிக" சமூகத்தை
தலைகுனியச் செய்திடும்
இருண்ட கணங்கள்.

"மனிதர்களை" மனிதர்
நாயினும் கேவலமாய்
நடத்த முடியுமா அப்பா?
என்று நீ கேட்கலாம்.
ஆம்,
இப்பொழுதும் இந்த வன்கொடுமைகள்
தொடர்கிறது...
புதிய வடிவங்களில்,
நீ எதிர்கொள்ளும் போது
இன்னும் நவீனப்பட்டிருக்கலாம்.

ஆனாலும்,
உன் கல்விக்கூடத்தில்
தீண்டாமை ஒரு பெருங்குற்றம்?
...................................என்று,
நாடே புனித திருவுருவாய்
இருப்பது போல்
வெற்று வார்த்தைகளை
உன்னுள் இட்டு நிரப்புவார்கள்
அப்பொழுது
உண்மையையும், பொய்யையும்
உரசிப் பார்த்துக் கொள்ள
நம் பகிர்தல் உனக்குப் பயன்படலாம்.

என் செல்ல மகளே!
நீ நடைபயில கற்றுக்கொண்ட
தருணங்கள்- உண்மையில்
அழகானவை, அற்புதமானவை.
எல்லா அப்பாக்களையும் போல்
அந்நிமிடங்களை மிகுந்த
ரசனையோடு விழுங்கியுள்ளேன்.
இருக்கட்டும்.

கடைவீதிக்கு சென்ற போதுதான்
உன் அம்மாவின் செல்லக் கத்தல்
ஞாபகத்திற்கு வந்தது.
"குழந்தை இருக்கும் வீட்டில்
பொம்மைகளை விட
புத்தகங்கள்தான் அதிகமாய் உள்ளது,
அவள் எவற்றோடுதான் விளையாடு-
வாள்?"


உனக்கான பொம்மைகள்
விளையாட்டு பொருட்கள்,
நிறைய வண்ணங்கள்
கொஞ்சம் தூரிகைகள்...
எல்லாம் வாங்கி விட்டேன்
குறிப்பாக,
நீ விரும்பிக் கேட்ட
அழுத்தி நடந்தால்
இசை எழுப்பக்கூடிய காலணிகளையும்
கவனமாய் வாங்கிக் கொண்டேன்.

அடுத்த வாரம்
அநேகமாய் நாம் ஊருக்கு
செல்ல நேரிடும்.
அப்பொழுது
மேலத்தெரு வழியாகத்தான்
தாத்தா வீட்டுக்குச் செல்வோம்.

ஆனால்,
நீ என்னோடு வரும்பொழுது,
உன் பிஞ்சுப் பாதங்களால்
மேலத்தெருவில் அழுத்தமாய்
பாதம் பதித்து நடக்க வேண்டும்.
உன் காலணிகளின் அடியிலிருந்து
எழும் இசை
அந்தத் தெருவில் குடிகொண்டிருக்கும்
சாதியத்தின் செவிகளை
துளைத்தெடுக்க வேண்டும்.
செய்வாயா என் செல்ல மகளே!

நீ நடைபயில கற்றுக்கொண்ட
தருணங்களை விட,
அப்போதைய நிமிடங்கள் இன்னும்
அழகானதாய், அற்புதமானதாய்
இருக்கும்.

முகிலன்



# திஸ்ஸ மக்கள் இப்போது தீர்மானம் எடுத்துள்ளனர்

## திஸ்ஸமாராம பிரதேச சபை முன்னாள் தலைவர்தோழர்.எச்.எல். ஜயசிறி

செஞ்சக்தி:- ஜனாதிபதியின் சொந்த ஊரில் பல உள்ளூராட்சி சபைகளில் வரவு செலவு திட்டம் தோல்வியடையும்போது இந்த தேர்தல் வந்துள்ளது. அம்பாந்தோட்டை மக்கள் இந்தத் தேர்தலில் எப்படியான முடிவினை எடுப்பார்கள்?

தோழர் ஜயசிறி:- அம்பாந்தோட்டை மாவட்டத்தை போல் கடந்த தேர்தல்களில் வாக்குறுதியளித்த மாற்றத்தை நாட்டில் எங்கும் காணமுடியாது. துறைமுகத்தில் வேலை தருவதாக கூறினர். காணி உறுதிபத்திரம் தருவதாக கூறினர். விமான நிலையம், சர்வதேச விளையாட்டரங்கு, சர்வதேச கருத்தரங்கு மண்டபம், மெகா சிட்டி அமைப்பதாக கூறினர். இவைகள் அனைத்தும் ஏமாற்று வித்தைகளாக இப்போது மாறியுள்ளது. அம்பாந்தோட்டையில் நீல படையினரை கலைக்க வேண்டிய நிலை ஏற்பட்டதற்கான காரணம் இவைகள் பற்றி இளைஞர்கள் கேள்வி கேட்பதிலாகும்.

விவசாயிகளின் உற்பத்திகளுக்கு நியாய விலை கிடைக்கவில்லை. கடந்த வெள்ளப்பெருக்கின்போது பெருமளவிலான வயல்கள் பாதிக்கப்பட்டது. இடர் முகாமைத்துவ அமைச்சர் அம்பாந்தோட்டையில் இருக்கின்றபோதும், இன்றுவரை ஐந்து பைசா நட்டஈடு வழங்கப்படவில்லை. மரக்கரி விவசாயிகள் இப்போது பாரிய கஷ்டத்தினை எதிர்கொண்டுள்ளனர்.

பெலியத்தை பிரதேசசபையிலும் தங்காலை நகரசபையிலும் அரசாங்கம் வரவு செலவில் தோற்றது, ஆளும் தரப்பினரிடம் இருந்த ஒற்றுமையின்மையே காரணமாகும். மக்கள் வாழ முடியாது கஷ்டப்படும்போது அரசாங்கத்திலும் ஓட்டைகள் விழுவது தவிர்க்க முடியாது.

அதனால் அம்பாந்தோட்டை வாழ் மக்கள் நாளுக்கு நாள் அரசாங்கத்தை விமர்சிப்பது அதிகரித்துள்ளது.

செஞ்சக்தி:- மக்கள் விடுதலை முன்னணி ஆட்சியின் கீழ் திஸ்ஸ பிரதேச சபையின் படிப்பினைகளை அழித்துவிடுவதற்கு அரசாங்கம் பெரும் முயற்ச்சி எடுத்தது. அப்பிரதேச சபையின் முன்னாள் தலைவராக நீங்கள் இதை எப்படி பார்க்கிறீர்கள்?

தோழர் ஜயசிறி:- நாம் பிரதேச சபையில் நிர்வகித்த 8 வருடங்களில் ஆரம்பம் முதலே எமக்கு எதிராகவே செயற்பட்டனர். ஆனால் இளைஞர்கள் மத்தியில் நாம் மக்களை இணைத்துக் கொண்டு திஸ்ஸ "நமது சபை" கட்டியெழுப்பினோம். கொந்திராத்து முறைக்குப் பதிலாக நாம் "மங்கள" திட்டத்தின் மூலம் வீதிகளை செப்பனிட்டோம். அதற்கு தேவையான டிப்பர், மோட்டர் கிரேடர், பெக்கோ இயந்திரம், புதிதாக விலைக்கு வாங்கினோம். இறுதியாக அரசாங்கம் நாம் கிரவல் வெட்டுவதை தடைசெய்தது. கணனி நிலையங்கள், முன் பள்ளி, குப்பைகள் மீள் சுழற்சி நிலையம், கைவினை பொருட் நிலையம். போன்ற பலவற்றை நாம் ஆரம்பித்தோம். மக்கள் இதை நம்பியதினால் தான் முதலாவது தடவையை விட இரண்டாவது தடவையில் எமக்கு மேலதிகமாக ஒரு உறுப்பினரை பெற்றுக் கொடுத்து சபை மீண்டும் எம்மிடம் ஒப்படைத்தனர்.

அரசாங்கத்திற்கு இந்த நிலமை கண்ணில் ஊசியால் குத்தியது போன்றதாகும். அதனால் எம்மீது பொய்யான குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டது கடைசியாக கடந்த ஜனாதிபதி தேர்தல் நடந்து இரண்டு நாட்களுக்குப் பின்னர் ஆணையாளரின் நிருவாகத்திற்கு கீழ் கொண்டுவரப்பட்டது. ஆனால் ஆணையாளர் ஆட்சிக்கு உட்பட்ட ஒருவருடகாலத்தில் மோசடி, வீண்விரயம் போன்றவைகளை விட புதிதாக ஒருவேலையும் செய்யவில்லை.

கனனி நிலையம் மூடப்பட்டது. குப்பைகள் மீள் சுழற்ச்சி திட்டம் கைவிடப்பட்ட நிலையில் சுகாதார நடவடிக்கை எதுவும் கிடையாது. "மங்கள" கருத்திட்டம் நிறுத்தப்பட்டது. வாகனங்கள் அனைத்தும் வெறுமனே துருபிடித்துபோகிற அளவு அதிகரித்துள்ளது. சபையின் கதவுக்கும் போட்டிருந்த இரும்புகள் கூட திருடபட்டுள்ளது. சபைத் தலைவரின் வாகனத்திலிருந்த பெட்டரியும் திருடப்பட்டுள்ளது. அரசாங்கத்திற்கு மக்கள் விருப்பத்துடன் திஸ்ஸ பிரதேசசபை வென்றெடுக்க முடியாததினால் பலாத்காரமாக சபையை கையேற்ற போதிலும், இப்போது நாங்கள் செய்த வேளைகளில் ஒரு அங்குலத்தை கூட வெற்றிபெற முடியாது போயுள்ளது.

செஞ்சக்தி:- தனிப்பட்ட ரீதியாக உங்களுக்கு இந்தத் தேர்தலில் போட்டிடுவதற்கு சட்டரீதியாக இடமளிக்கப்படவில்லை. ஆனால் எதிர்வரும் தேர்தலிலும் அதற்குப் பின்னரும் உங்களின் சிறந்த சேவை திஸ்ஸ மக்களுக்கு கிடைப்பதெப்படி?


தோழர் ஜயசிறி:- அரசியலை வயிற்றுப் பிழைப்பாக கொண்டு மக்களை ஏமாற்றும் இந்த மோசடிகாரர்களுக்கு எம்மை தடுக்க முடியும். ஆனால் எம்மை மௌனமாக்கவோ எமது பயணத்தை தடுக்கவோ முடியாது. நான் எனது ஆசிரியர் தொழிலையும் எட்டுவருடமாக கைவிட்டு விட்டு சபையின் ஒரு லீட்டர் பெற்றோலை கூட எனது தனிப்பட்ட தேவைகளுக்காக பயன்படுத்தாது மக்களும் எனது கட்சியும் என்னிடம் ஒப்படைத்த கடமையை நிறைவேற்றியது என்றும் அவைகள் பற்றிய திருப்தியுடனேயன்றி வெறுப்பு அல்ல. திஸ்ஸ சபைக்கு சான்றிதழ்கள் கிடைத்தது தனிபட்ட ரீதியில் எங்கள் இரண்டு மூன்று பேரினால் அல்ல. எமது கட்சியின் திடமான கட்டுபாட்டுடனான வழிகாட்டுதலினால் தான் திஸ்ஸ "எமது சபையை" உருவாக்குவதற்கு முடியுமாயிருந்தது.

நாங்கள் கடந்த காலத்து அடக்குமுறையின்போது மரணத்தை அண்மித்து உயிர்தப்பி மனிதர்கள் மரணத்தின் முன்னால் கைவடாத எமது குறிக்கோள் மற்றும் கொள்கைகளை சாகும்வரையில் பாதுகாப்போம். வேட்பாளராக இல்லாதபோதிலும் இம்முறைத் தேர்தலில் எமது கட்சியை வெற்றிபெறச் செய்வதற்கு தலைமை தாங்கி செயற்படுவேன். எதிர்காலத்திலும் இந்த ஏமாற்று முறையை மாற்றி சோஷலிசத்தை கட்டியெழுப்புவதை உயர்ந்தபட்ச அர்ப்பணிப்புகளை செய்வேன்.

செஞ்சக்தி:- இம்முறை திஸ்ஸ பிரதேச சபைத் தேர்தல் எப்படி அமையும். ஜே.வி.பியின் வெற்றி தொடர்பாக உங்களின் கணிப்பீடு?

தோழர் ஜயசிறி:- திஸ்ஸ மக்களின் சபையை பலவந்தமாக பறித்தலை மக்கள் அனுமதிக்க மாட்டார்களா என்பதை இந்த தேர்தலில் மக்கள் முடிவு செய்வார்கள். அது பற்றிய நம்பிக்கையிருக்கிறது. அரசாங்கத்தின் பேராசை, ஜனநாயக விரோத போக்கிற்கு மக்கள் நீதிமன்றத்தில் முதலாவது தீர்ப்பினை திஸ்ஸ மக்கள் இந்த தேர்தலில் பெற்று கொடுப்பார்கள். இந்த தேர்தலில் திஸ்ஸ பிரதேச சபைக்காக பலம் வாய்ந்த அணி இருப்பது எமது கட்சியாகும். மக்கள் நம்பக்கூடிய பணத்திற்கு தன்மானத்தை விற்காத எந்தவொரு தியாகத்தையும் செய்யக்கூடிய அணி எமது அணியாகும். அரசாங்கம் எவ்வாறான அதிகாரத்தை பிரயோகித்தாலும், எவ்வளவு அவதூறுகளை ஏற்படுத்த முனைந்தாலும் திஸ்ஸ மக்கள் இப்போது முடிவு செய்து விட்டனர் என்பது எங்களுக்குத் தெரியும்.


# தேசிய ஒற்றுமைக்கு கியுபா சிறந்த முன்னுதாரணம்!



அண்மையில் பிறந்த புத்தாண்டை சிறந்த ஆண்டாக எதிர்கொள்வதற்கு அனைத்து நாடுகளுக்கும் முடிந்ததா?. அனேக நாடுகளுக்கு இந்த சந்தர்ப்பம் கிடைக்கவில்லை என்பதே உண்மை. ஆனால் இந்த அரிய வாய்ப்பு லத்தீன் அமரிக்காவில் உள்ள மிகச் சிறிய தீவுக்கு கிடைத்தது. அத்தீவு சோஷலிச கியுபாவாகும். 1959 ஜனவரி 01ம் திகதி புரட்சி வெற்றியடைந்ததன் பின்பு அந்நாட்டு மக்களுக்கு இந்த அரிய சந்தர்ப்பம் கிடைத்தது. பெசிஸ்டாவின் சர்வாதிகார போக்குக்கு எதிராக பிடல் கஸ்ரோ மற்றும் சேகுராவின் தலைமையில் அந்நாட்டு மக்கள் மேற்கொண்ட கிளர்ச்சியினால் சோஷலிச கியுபாவை வென்றெடுக்க முடிந்தது.

தனது குடும்பத்தின் நலனை நோக்கமாகக் கொண்டு சொத்துக்களை சூறையாடி நாட்டை குட்டிச்சுவராக்கிய பெசிஸ்டாவின் ஆட்சி காலத்தில் வறுமையும், பட்டினியும், ஏமாற்றமும், நிறவேறுபாட்டின் அளுத்தங்கள் போன்றவையே கியுபா மக்களுக்கு உரித்தாகியது. பொதுவாக நாட்டினுள் பெசிஸ்டாவின் ஆட்சி காலத்தில் சிறைக்கைதிகளாகவே இம் மக்கள் வாழ்ந்தனர்.

அமெரிக்க உட்பட ஏகாதிபத்திய நாடுகளின் பொருளாதரத் தடைகள் மற்றும் சூழ்சிகளுக்கு மத்தியிலும் இன்று கியுபா மக்கள் சிறந்த சுகாதார வசதிகளையும் (299 குடும்பங்களுக்கு ஒரு வைத்தியசாலை) சிறந்த கல்வியையும் (98% கல்வியறிவு உடையவர்கள்) சிறந்த முறையில் வாழ்வதற்கான வேலைவாய்ப்புகள் வீட்டு வசதிகள் (திருமணமாகும் அனைவருக்கும் அரசாங்கத்தினால் ஓர் வீடு வழங்கப்படும் ) போன்றவை வழங்கப்படுகிறது. இங்கு இன அடிப்படையில் மக்களை துன்புறுத்தலுக்குள்ளாவதில்லை. கியுபா பல இன மக்கள் வாழும் ஓர் நாடாகும். 60% வெள்ளையரும், 40% ஒன்று கலந்த இனத்தவரும் இதில் அடங்குவர். இவர்களுல் கருப்பு முலாட்டோ (வெள்ளை, கருப்பு கலந்து) மெஸ்டிஷோ (வெள்ளை, லத்தீன் அமெரிக்க) மற்றும் சீன வம்சாவழிகள் போன்றோர் அடங்குவர். ஆனால் இன்றைய கியுபாவில் கியுபர்களாக திறந்த மனதுடன்


May Day 2009, Havana, Cuba

ஒருவருக்கொருவர் சகோதரர்களாகவும் , சமத்துவமாகவும் வாழ்கின்றனர். ஓர் காலகட்டத்தில் கியுபாவில் இலங்கை தூதுவராக கடமையாற்றிய சுசன்த கொடிதுவக்கு அவர்கள் தனது கியுப அனுபவங்கள் தொடர்பாக எழுதிய "கஸ்த்ரோவின் தேசம்" என்ற புத்தகத்தினூடாக இது தொடர்பாக அறிந்து கொள்ள முடியும். அதில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அரச நிறுவனமொன்றில் மொழிபெயர்ப்பாளராக பணிபுரியும் கறுப்பினத்தவரிடம் , நீங்கள் ஏன் பிடெலை விரும்புகிறீகள் என்று வினவினால் அவர் இவ்வாறு பதிலளிப்பார் "நான் இந்தக் கேள்விக்கு மிகவும் விரும்பமுடனேயே பதிளலிக்கிறேன் பிடெல் எமக்கு சகல உரிமைகளையும் வழங்கியுள்ளார். விசேடமாக கறுப்பிதனத்தவராகிய நாம் புரட்சிக்கு முன் அடிமைகளாகவே இருந்திருக்கின்றோம் இக்காலத்தில் நான் பிறந்திருக்காவிட்டாலும் எனது தந்தையும், தாத்தாவும் இவை குறித்து எனக்கு கூறியிருக்கிறார்கள் நாம் எந்நாளும் இரண்டாம் தரப்பு பிரஜைகளாகவே வாழ்ந்து வந்திருந்தோம். தென்னாபிரிக்காவில் நிலவிய வெள்ளை கருப்பு மக்களுக்கு வெவ்வேறான கொள்கைகள் இருந்ததை நீங்கள் கேள்விப்பட்டிருப்பீகள் அவ்வாறே இங்கும் இருந்திருக்கின்றது. வெள்ளையரின் வீடுகளில் பணியாற்றிய கருப்பினத்தவர்கள் மாலை ஆறு மணியாவதற்கு முன்பு ஹவானாவிலிருந்து வெளியேற வேண்டும். இல்லையேல் பொலிசாரினால் கைது செய்து தடுத்து வைத்துக் கொள்வார்கள் . இவற்றையெல்லாம் இல்லாதொழித்து எம்மையும் மனிதர்களாக மாற்றியமைத்தவர் பிடெல் ஆகும். எமக்கும் சிறந்த பாடசாலைகளில் கல்வி கற்கவும், பல்கலைக்கழகங்களில் கற்பதற்கும் சந்தர்ப்பங்கள் வழங்கி, இராணுவத்தில் இணைந்து கொள்வதற்கும், அரச துறையில் இணைந்து கொள்வதற்கும், உரிமை வழங்கியவர் பிடெல் ஆகும். இன்று கருப்பினத்தவர்களும் தலை நிமிர்ந்து இந்நாட்டின் ஏனைய பிரஜைகளைப் போன்று வாழ்கின்றோம். பிரதி ஜனாதிபதிகள் ஐந்து பேரில் இரண்டாவதாக உள்ள "ஜுவான் அல்மேதா" ஓர் கறுப்பினத்தவர் என்பது உங்களுக்கு தெரியுமா? இதைவிட மேலதிகமாக எதையும் குறிப்பிடத் தேவையில்லை என்று நினைக்கிறேன். தொடர்ந்தும் கறுப்பினத்தவர் வெள்ளையரின் வீடுகளில் வேலை செய்ய வேண்டியதில்லை. இதே போன்று வீதியில் பிச்சை யெடுப்பதற்கோ, களவுகளில் ஈடுபடுவதற்கோ தேவைலயில்லை. விளங்கியதா?"


(பக்கம் 68-69)

இன்று சோஷலிச கியுபா இவ்வாறாக இயங்கிக் கொண்டிருக்கும் தருணத்தில் தெற்காசியாவில் இருக்கும் சிறிய தீவான எமது நாடு இலங்கையில் நிலவிய யுத்தச் சூழல் முடிவடைந்து இரண்டாவது வருடத்தை அண்மித்துள்ள தறுவாயில் இங்கு தமிழ் மக்கள் மிகக் கொடுமைகளை சந்தித்து வருகின்றனர். யுத்தம் முடிந்த காலகட்டத்தில் இந் நாட்டில் சிறுபான்மை இனம் என ஒன்றில்லை என்று குறிப்பிட்ட மகிந்த ராஜபக்ஷெ

குறுகிய காலத்திற்குல் தேச-

(10ம் பக்கம்...)

# ரஞ்சிதம் குணரத்தினம் சிறந்த போர்குணமிக்க இளம் நெஞ்சம்!



80 காலப்பகுதியில் இலங்கை மாணவர் இயக்கம் குறித்து ஆராயும் போது எமக்கு காணக்கூடிய மிக உன்னதமான மாணவர்த் தலைவர்களிடையே தோழர் ரஞ்சிதம் குணரத்தினம் தொடர்பாக விசேடமாகக் குறிப்பிடலாம். 1981ம் ஆண்டு கேகாலை மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்து பேராதனை பல்கலைக்கழகத்தின் பொறியியல் பிரிவுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பல்கலைக்கழகத்தினுள் மாணவர்களின் பொதுப்பிரச்சினைகள் குறித்து எதுவித வேறுபாடுமின்றி தலையிட்டு அவற்றிற்கு அவர் தலைமை தாங்கினார். அனைத்து விடையங்கள் தொடர்பாகவும் பரந்த அறிவும், தொலை நோக்கும், மாணவர்களுடனான சக்திவாய்ந்த சகோதரத்துவம் போன்ற காரணங்களினால் மாணவர்கள் முழு மனதுடன் அவரை நேசித்ததுடன் அவரின் தலைமைத்துவத்தையும் ஏற்றுக்கொண்டனர்.

ஆனால் பல்கலைக்கழக நிர்வாகமும் இவர்களை நகர்த்தும் ஐக்கிய தேசிய கட்சி அரசு ஆட்சியாளர்களுக்கும் தோழர் ரஞ்சிதத்தின் நடவடிக்கைகள் பெரும் தலையிடியாகியது. 1983 ம் ஆண்டு பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற ஓர் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு நியமிக்கப்பட்ட "உதலாகம ஆணைக்குழுவால்" தோழர் ரஞ்சிதம் குணரத்தினம் உட்பட 6 மாணவர்களின் மாணவர் தகுதியை ஒரு வருடகாலம் தடைசெய்யப்பட்டது. ஆனாலும் இவ்வாறான அச்சுறுத்தல்களினால் தோழர் ரஞ்சிதமின் நடவடிக்கைகளை தடுத்தநிறுத்த ஆட்சியாளர்களுக்கு முடியவில்லை. பொறியியல் பட்டத்தைப் பெற்று தனிப்பட்ட ரீதியில் ஓர் சுகபோக வாழ்வை அனுபவிப்பதற்கு பதிலாக மாணவர் பரம்பரையின் மற்றும் ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட மக்களின் உரிமைகளை வென்றுகொடுப்பதையே தமது வாழ்க்கையாக தேர்ந்தெடுத்தார்.

1983ம் ஆண்டு மாணவர் அமைப்புகளை தடைசெய்து பல்கலைக்கழகங்களுக்குள் பொலிஸ் நிலையங்களை அமைத்து ஐ.தே.க. மேற்கொண்ட அடாவடித்தனங்களுக்கு எதிராக முற்று முழுதான மாணவர் இயக்கமும் கிளர்சிகளில் ஈடுபட்டது. அன்றைய அரசின் குறித்த எதிர்பார்ப்புகள் தோற்கடிக்கப்பட்டன. 1985ம் ஆண்டு அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் இணைப்பாளராக தோழர் ரஞ்சிதம் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இலங்கையின் தேசிய பிரச்சினை தொடர்பாகவும் இக்காலகட்டத்தில் மாணவர் இயக்கத்தினுல் கருத்தாடல்கள் காணப்பட்டது. இக் காலகட்டத்தில் சோஷலிச மாணவர் சங்கத்தின் செயல்பாட்டாளரான அவருக்கு தேசிய பிரச்சினை தொடர்பாக பரந்த விளக்கம் இருந்தது. இப் பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டியது சகல இனத்தவர்களுக்கும் சமத்துவத்தின் அடிப்படையில் உரிமைகள் வழங்குவதால் மட்டுமே என்பதை தர்க்க ரீதியாக விளக்கிக் காட்டினார்.

(10ம் பக்கம்...)

# கிராமத்தை தோலுரித்து நகரத்தை அமைத்தல்!

இப்போது உள்ளூராட்சித் சபை தேர்தல் நடைபெறுகிறது. உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு கிராமத்தில் தேர்தல் நடாத்தப்படுவதுடன் அதையே பயன்படுத்தி அரசாங்கம் புதிய விளையாட்டொன்றை ஆரம்பித்துள்ளது. அது கிராமத்தை நகரமாக்குவதாகும். வேறுவழியில் கூறுவதென்றால் தெரிவு செய்யப்பட்ட கிராமத்து நகரசபைகளை மாநகரசபைகளாக்குவதாகும். அரசாங்கத்தின் பிரதான எதிர்பார்ப்பு, இலங்கை ஆசியாவின் ஐஸ்வர்யமாக ஆகும்போது கிராமத்தையும் ஐஸ்வர்யமான நகரமாக மாற்றுவதாகும். அதற்கான நிர்வாக முறையான பிரதேச சபை, அந்த அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தை நகரசபையாகவோ அல்லது அதற்கு வேறு பெயர்களிலான சபையொன்றை அமைப்பதற்கு அரசாங்கத்தின் பணியாகவுள்ளது. உதாரணமாக கொழும்பு மாவட்டத்தில் இப்போது கடுவெல ஒரு பிரதேச சபையாகும். தேர்தலின் பின்னர் அமைக்கப்பட போவது மாநகரசபையாகும். அப்பிரதேச சபையின் முன்னாள் தலைவர் இம்முறை தேர்தலில் அவிழ்த்து போட்டு ஆடுவது வரலாற்றில் முதலாவது கடுவெல நகரசபை மேயராக பதவிப் பிரமாணம் செய்வதற்காகும். கடுவெல பிரதேசசபையை தோலுரித்து அரசாங்கம் மாநகர சபையாக மாற்றுவதற்கு தயார். கிராமத்திற்கும் நகரத்திற்கும் உள்ள வேறுபாடுகள் முரண்பாடுகளை சமத்துவமின்மையை அகற்றாது பெயர் பலகையில் மட்டும் தோலுரிப்பதன் மூலம் அபிவிருத்தி அடைய முடியுமா? எப்படியும் முடியாது. கிராமத்திற்கும் நகரத்திற்கும் இடையில் இருப்பது முதலாளித்துவத்தின் அபிவிருத்தியின் அசமத்துவத்தால் எழும் அடிப்படையற்ற முரண்பாடுகளாகும். அதை அகற்றுவதென்றால், அது கிராமத்திற்கும் நகரத்திற்குமாக உள்ள சமத்துவமின்மையை நீக்குவதற்கு பொதுவான வேலைத்திட்டம் தேவைப்படுகிறது. அப்படியின்றி தேர்தலில் மட்டும் கிராமத்தை அழித்துவிட்டு நகரத்தை அமைப்பதென்பது மக்களுக்கு தண்ணிகாட்டும் கலையின் இன்னுமொரு வடிவமாக அமையாதா?

இலங்கையில் முதலாளித்துவ அபிவிருத்தியின் சமத்துவமின்மை காரணமாக நகரமயம் என்று கருத முடிவது. 12% மாகும்.

மக்கள் தொகையில் 70% மானோர் வசிப்பது கிராமப்புறங்களிலாகும். மொத்த மக்கள் தொகையான 19.7 மில்லியனில் நகர வாழ் மக்கள் தொகை 2.8 மில்லியனாகும் அதேவேளை கிராமத்து மக்கள் தொகையில் 15.8 மில்லியன்களாகும். மிகுதி 11 மில்லியன் மக்கள் தேயிலை தோட்டங்களில் வாழுகின்றனர். இந்த 15.8 மில்லியன் கிராமிய மக்களின் வறுமையை ஒழிப்பதற்கு, அசாதாரண ஒடுக்குமுறையை ஒழிப்பதற்கு நியாயமான பகிர்ந்தழிப்பு உற்பத்தி பொருளாதார முறையை தயாரிக்காது குறைந்த பட்சம் அதற்காக நம்பிக்கையுடன் செயற்படாது நிருவாக முறைகளை மா நகரசபைகளாக அமைப்பது வித்தைகளாகும்.




இலங்கையில் முதலாளித்துவ முறையிலும் கூட தீர்க்கப்படாத பிரதான பிரச்சினையாக இருப்பது சமத்துவமற்ற முறையில் வருமானம் பிரிந்து போவதாகும் கிராமத்திற்கும் நகரத்திற்குமிடையில் சமத்துவமின்மைக்கு அந்த நிலமை நேரடியாக பாதிப்பினை ஏற்படுத்துகிறது. அரசாங்கத்தின் புள்ளி விபரிய வருமானத்தில் சென்றிருப்பது 48% வீதமாகும் அது சமத்துவமின்மையின் வெளிப்பாடாகும். ராஜபக்ஷ ஆட்சியும் மற்றைய முதலாளித்துவ அரசாங்கங்களைப் போன்று இந்த சமத்துவமின்மையை ஒழிப்பதற்கு சிறிதளவேனும் முயற்சி எடுக்கவில்லை. முதலாளித்துவ முறையின் கீழ்



அறிக்கையின்படி மாதாந்த் தனி நபர் வருமானம் 8931 ரூபாய் ஒரு கோடியே 97 லட்ச மக்களுக்கு இந்த வருமானம் பெயரளவில நியாயமிருக்கிறது. ஆனால் அரசாங்கத்தின் மக்கள் தொகை கணிப்பிட்டு திணைக்களத்தின் உத்தியோகப்பூர்வ அறிக்கையில் 20%மக்களுக்கு தேசிய வருமானத்தில் 47% சிறுதொகையே சென்றடைகிறது என்கிறது. அதேபோல் மக்கள் தொகையில் 40% திற்கு தேசிய வருமானத்தில் 13.9% வருமானம் பகிர்ந்து செல்லும்போது மக்கள் தொகையின் செல்வந்தர்களாக 20% திற்கு இலங்கையின் தேசிய வருமானத்தில் 52% த்தை சொந்தம் கொண்டாடுகின்றனர். வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால் மக்கள் தொகையில் 80% திற்கு தேச-

அப்படியான முயற்சிகள் பயனளிக்க போவதுமில்லை. உற்பத்திற்கு மக்களின் பங்களிப்பினை பெற்று கொள்ளும் செயற்பாடுகளும் இந்த வருமானம் பகிர்ந்தளிக்கப்படும் செயலும் சமமானதாகும்.

நாட்டில் முழு உற்பத்திக்கும் மேல் மாகாணத்தில் 53% பங்களிப்பு செய்யும் போது நாட்டின் ஏனைய பகுதிகளின் பங்களிப்பு 47% வீதமாகும். அது ஊவா மாகாணத்தில் 7% திற்கு குறைவாகும். வடக்கு கிழக்கு பகுதிகளில் பங்களிப்பு கிடைப்பதாயில்லை. உற்பத்தி செயற்பாட்டிற்கு பங்களிப்பு செய்யாத பிரஜை வாழ்வதற்கான உரிமையை மறுக்கப்பட்ட ஒருவருக்கு சமமாகும்.

தெரிவு செய்யப்பட்ட பிரதேசசபையொன்றை நகர மட்டத்தின் அளவுக்கு கட்டியெழுப்புவதென்றால் அது வருமானத்தை தேடுவதை மட்டும் வைத்து கணிப்பிட முடியாது. அந்த மக்கள் உற்பத்தி செயற்பாட்டிற்கு பங்களிப்பு செய்யும் அளவுக்கு அவர்களின் கலாசார வாழ்க்கையும் கட்டியெழுப்பியாக வேண்டும். பிள்ளைகளுக்கு படிப்பதற்குள்ள பாடசாலைகள் எண்ணிக்கையை போலவே கல்வியில் உள்ள பண்பு ரீதியாக அளவு, வைத்தியசாலை வசதிகள், பொது வசதிகளின் தன்மை ஓய்வெடுப்பதற்காக உள்ள நிலைமைகள் இதிலடங்கும்.

இவ்வாறான விடயங்களை கருத்திலெடுக்காது குறைந்தபட்சம் பிரதேசசபையே நகரசபை அல்லது மாநகரசபையாக மாற்றும்போது குறிப்பிட்ட பிரதேசத்தின் அதிகரித்த மக்கள் தொகையை பற்றியேனும் போதுமான கணிப்பீடு ராஜபக்ஷ அரசாங்கம் செய்துள்ளதா என்பது சந்தேகத்துக்குரிய விடயமாகும்.

பிரதேச சபையின் பெயர் பலகையில் நகர சபையாக மாற்றுவதன் மூலம் கிராமத்திற்கும் நகரத்திற்கும் உள்ள வித்தியாசத்தை ஒழிக்க முடியாது முதலாளித்துவ முறைக்கு இதனை செய்ய முடியாது அதை பெயரளவில் மாற்றுவதை மட்டுமே செய்ய முடியும்.

உண்மையாக அந்த மாற்றத்தை செய்ய முடிவது சோஷலிச சித்தாந்தத்தின் அடிப்படையிலான மக்கள் பொருளாதாரத்தை நடைமுறைக்கு கொண்டு வருவதன் மூலமேயாகும். கிராமம் மற்றும் நகரத்தில் உள்ள முதலாளித்துவம் தோற்றுவித்த சமத்துவமின்மை ஒழிக்கப்படுவது அப்போதாகும். அதற்காக முதலாளித்துவம் உற்பத்தி செயற்பாடுகளில் செழிக்கப்பட்டுள்ள பயிற்றுவிக்கப்பட்ட உழைப்பின் உழைப்பையும் சேர்த்தாக வேண்டும். அவர்கள் உற்பத்தி செயற்பாடுகளில் நேரடி பங்காளிகளாக மாற்றுவதுடன் அந்த உற்பத்திக்கு பங்களிக்கும் பயன்கள் அவர்களுக்கு நியாயமாக பகிந்தளிக்கப்படல் வேண்டும். அதேபோல் அரசாங்கத்தால் அடிப்படை வசதிகள் அனைத்தும் செய்து கொடுத்தாக வேண்டும். கிராமம் நகர வேறுபாடின்றி திருப்திகரமான மனிதன் அப்போதே உருவாகுவான். கிராமம் நகரமானாலும் கிராமம் கிராமமாக இருந்தாலும் அது வாழ்வதற்கு பிரச்சினையாக தடையாக இருக்காது.

நகர நெருக்கடியும் தீர்வு கிடைப்பது அப்போதாகும். கிராமத்தை விட்டு நகரத்தை நோக்கி வேலைத் தேடி செல்லும் நிலை ஏற்படாது.

முதலாளித்துவ ஆட்சியாளர்களால் முடியாது போலிருப்பது அதுவாகும். அந்த பணி பழைய காலாவதியாகிக் கொண்டிருக்கும் முதலாளித்துவ அரசாங்கங்களால் முடியாது. அவர்களால் இன்று செய்வது போன்று தேர்தல்களில் ஏமாற்றவும் பெயர் பலகைகளை மாற்றுவதுமேயாகும். உண்மையில் கிராமத்தை நகரமாக்க முடிவது மக்கள் பொருளாதாரத்தில் நடைமுறைப்படும் சோஷலிச சமூக சீர்த்திருத்த நடவடிக்கைகளால் மட்டுமேயாகும்.

9ம் பக்க தொடர்ச்சி
நகரத்தை....

இந்தியாவிலிருந்து இலகுவாக தேங்காய் கொண்டுவர முடியாது. நமது நாட்டில் ஓரிடம் சார்ந்த தாவர பாதுகாப்பதற்கான தாவர பாதுகாப்பு சட்டமூலத்தைப் போன்றே தாவர தொற்றுநோய் தடை சட்டமும் இருக்கிறது. அதற்கு ஏற்ப வெளிநாட்டிலிருந்து தேங்காய் கொண்டுவர முடியாது. அப்படி கொண்டு வருவதென்றால் அதற்காக விசேட வழிமுறைகளை பின்பற்ற வேண்டும். ஆனால் மக்கள் இவ்வாறானவற்றை தெரியாமலிருப்பதில் லாபமடையும் அரசாங்கம் இந்தியாவிலிருந்து தேங்காய் கொண்டுவருவதாக கூறி பிரச்சினையிலிருந்து மீண்டது.

ஆனால் இன்னமும் தேங்காய் விலை “தலைச்சுற்றும்” நிலையிலேயே உள்ளது.

அண்மையில் பெரும் மழைகளினால் ஏற்பட்ட வெள்ளத்திற்கு நிவாரணத்தை தேடாத அரசாங்கம் அதன்போதும் மலிவான விரத்தியான ஏமாற்றிலிருந்து பிரச்சினையை கைகழுவியது. வெள்ளம் பெருகி குளங்கள் பெருக்கெடுத்து கிராமங்களை நீரினால் மூழ்கடித்து மக்கள் பாதிக்கப்படும்போது பல வாரங்களாக மௌனமாக இருந்த அரசாங்கம் பிரச்சினனை உக்கிரமடைந்த போதும் கூட மக்களைப் பற்றி கவலைப்படுவதாக இல்லை.

8ம் பக்க தொடர்ச்சி
ரஞ்சிதம்....

இவ்வாறே, சகலவித இனவாத நடவடிக்கைகளும் முதலாளித்துவ வர்க்கத்தையும் ஏகாதிபத்தியத்தையும் சார்ந்தவையாக அமையும் எனவும் பாட்டாளி வர்க்கத்தின் ஒற்றுமை மிக மிகத் தேவையான தொன்று எனவும் சுட்டிக்காட்டியது குறிப்பிடத்தக்க விடயமாகும். இது மட்டுமன்றி அன்றைய காலகட்டத்தில் உள்நாட்டில் மற்றும் சர்வதேச மட்டத்தில் நிலவிய அரசியல் முரண்பாடுகள் தேசிய பிரச்சினை குறித்து எவ்வாறானதொரு தாக்கத்தை ஏற்படுத்தியது போன்ற விடயங்கள் குறித்து மிகவும் புத்திசாதுரியமாக விளக்கிக் கூறினார்.

80வது தசாப்தத்தின் இறுதி காலகட்டத்தில் நாடும் நாட்டு மக்களும் இந்திய ஏகாதிபத்தியத்துக்கு எதிராக மேலெழும்பிய தேசப்பற்று மக்கள் கிளர்ச்சிகளில் தனது உரிய தலைமைத்துவமும், இளமை துடிப்பும், துணிச்சலையும் ஒன்று சேர்த்தார். 1986ம் ஆண்டு காலப்பகுதியில் சோஷலிச மாணவர் சங்கத்தின் பிரதான செயலாளராகவும் மக்கள் விடுதலை முன்னணியின் மத்திய குழு அங்கத்தவராகவும் முதலாளித்துவ கொடூர அடக்கு முறையை எதிர்த்து முன்னோக்கிச் சென்றார். 1989ம் ஆண்டின் பின் மக்கள் விடுதலை முன்னணி அரசியல் குழுவில் கடமையாற்றிய தோழர் ரஞ்சிதத்தை 1990ம் ஆண்டு முதலாளித்துவ வெறியர்கள் எம்மிடமிருந்து பறித்து கொண்டனர்.

ஆனால், அர்ப்பணிப்புகள் தொடர்பாவும், விட்டுக்கொடுப்புகள் தொடர்பாகவும், பொங்கி வழியும் மனித நேயம் தொடர்பாகவும், குறிக்கோள் மற்றும் துணிச்சல், புத்தி சாதுரியமான தலைமைத்துவம் குறித்தும் இவர் விட்டு சென்ற அடையாளங்கள் இலங்கை மண்ணில் என்றென்றும் நிலைத்து நிற்கும்

8ம் பக்க தொடர்ச்சி
தேசிய....

ிய கீதத்தை சிங்கள மொழியில் மட்டும் பாடுவதற்கு சட்டங்களை கொண்டுவர முயற்சியெடுத்ததை மறுக்க முடியாது. தற்போது யாழ்பானத்தில் வாழும் சனத்தொகை சுமார் 5,50,000ஆகும். அரச இராணுவம் சுமார் 50,000 காணப்படுகின்றனர். இதற்கேற்ப பொது மக்கள் 10 பேருக்கு ஒருவர் என்ற விகிதத்தில் அரச இராணுவத்தினர் உள்ளனர். இன்றும் சுமார் 10,000 தமிழ் இளைஞர், யுவதிகள் தடுப்பு முகாம்களில் வைத்துள்ளதுடன் இவர்களுல் பெரும்பாளானவர்களுக்கு எதுவித குற்றச் சாட்டும் இன்றியே தடுத்து வைத்துள்ளனர். இடம்பெயர்ந்த மக்களில் சுமார் 72,000 மக்கள் இன்னமும் வாழ்வதற்கு ஓர் குறிப்பிட்ட நிலம் இன்றி அவதிப்படும் நிலையே காணக்கூடியதாகவுள்ளது.

தனது இனம் காரணமாக தாம் பிறந்த மண்ணிலே இவ்வாறு இரண்டாம் தரப்பு பிரஜைகளாக பல்வேறு இன்னல்களை அவர்கள் எதிர்கொள்கின்றனர். அன்று கியுபாவில் பெசிஸ்டாவைப் போன்றே இன்று எமது நாட்டிலும் குடும்ப ஆட்சியை பலப்படுத்தும் , மக்கள் எதிர்ப்பார்ப்புகளை மறுதலிக்கும் ஆட்சியையே காண்கிறோம். எமது நாட்டு மக்களும் இனவேறுபாடில்லாத, சமாதானம், சகோதரத்துவம் நிரம்பிய, அனைவருக்கும் உரிமைகள் கிடைக்கும் சமுதாயத்தை நிறுவ முடிவது, நாம் தற்போது வாழ்ந்து கொண்டிருக்கும் வீழ்ச்சியை நோக்கி செல்கின்ற முதலாளித்துவ முறையை முற்று முழுதாக மாற்றியமைப்பதினால் மட்டுமே சாத்தியமாகும் இதைத் தவிர வேறு எந்த மார்க்கமும் இல்லை யென்பதே கியுபா எமக்கு கற்பிக்கம் பாடமாகும்.

5ம் பக்க தொடர்ச்சி
தொடர்ந்து...

ஏற்படுத்த முடியாதுள்ளது.


செஞ்சக்தி:- மீள்குடியேற்றம், சிறையில் அடைக்கப்பட்டுள்ளன இளைஞர் யுவதிகளின் விடுதலை தொடர்பாக என்ன கூறுகிறீர்கள்?

செல்வா:- மீள் குடியேற்றம் வெறும் கண்துடைப்பாகும். நாங்கள் கிளிநொச்சி முல்லைதீவு மாவட்டங்களுக்கு செல்லும்போது “வடக்கின் வசந்தம்” என்ற பதாகைகளை காண முடிகிறது.

ஆனால், வடக்கின் மக்களுக்கு வாழ்க்கையில் வசந்தம் ஏற்பட்டுள்ளதா என்றால் இல்லை. அதற்குப் பதிலாக வடக்கை முன்னேற்றுவதாக கூறும் அமைச்சர்களுக்கு வசந்தம் பிறந்திருக்கிறது. மக்கள் பாரிய கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர். வீதி புரணமைப்பு, நீர்மாணம், குளங்கள் புனரமைப்பு, வீடுள் புனரமைத்தல் போன்றவைகள் அனைத்தும் ஆரம்ப நடவடிக்கைகளை கூட காண முடியாதுள்ளது. அதனால் மக்கள் படும் துன்பங்களுக்கு இந்த அரசாங்கத்தால் தீர்வினை பெற்றுக் கொடுக்க முடியாது போயுள்ளது.

அதேபோல், கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருக்கும் இளைஞர் யுவதிகளின் விடுதலைக்கான சட்ட நடவடிக்கைகள் மட்டுமல்ல. அவர்களின் விபரங்களைக் கூட பெற்றோர்களுக்கு பெற்றுக் கொடுக்கப்படவில்லை. இது தான் இன்றைய வன்னி நிலத்தின் துயரம் இந்த துயரங்களை துடைத்தெறிவதற்கும். அவர்களுக்கான அடிப்படைத் தேவைகள் அபிலாஷைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கான பாரிய அழுத்தத்தினை அரசாங்கத்திற்கு கொடுத்தாக வேண்டும். அதை செய்ய நாம் தயார்.

# மகிந்த அரசுக்கு ஐ.தே.க மாற்றீடாகாது!



ராஜபக்ஷ அரசுக்கு எதிரான மக்கள் கண்டனம் நாட்டில் பரவலாகக் காணக்கூடியதாகவுள்ளது. வாழ்க்கைச் செலவு கட்டுமீறி அதிகரிப்பு, வரிச்சுமை பொதுமக்களை வாட்டி வதைக்க மறுபுறமாக அரசு புதிதாக அறிமுகப்படுத்திய பல சட்டங்களினாலும் அபராதக் கட்டணங்களாலும் வாட்டி வதைக்கப்பட்டு வருகிறார்கள் எனவே, சூழல் வரி, ஒழுக்கத்தை கடைபிடிப்பதற்கான வரி போன்ற பல்வகை வரிவகைகள் மக்களின் கழுத்தை நெரிக்கின்ற போதும் திரைசேரயின் தாகம் தீர்ந்ததாக இல்லை. அதேவேளை இந்த அரசின் நடவடிக்கைகளுக்கு எதிராக கதைக்கவோ எதிர்ப்பதற்கோ **ஐ.தே.கட்சிக்கு உள்ள அருகதை என்ன? இன்றைய அனைத்து மக்கள் விரோத** போக்குகளுக்கும் முன்மாதிரியாகத் திகழ்ந்தவர்கள் ஐ.தே.கட்சியினரேயாகும். ஐ.தே.கட்சி விதைத்தைவையே மக்கள் தற்போது அனுபவிக்கின்றனர். அரசின் நடைமுறையில் ஏதாவதொரு குறைபாட்டையோ தனிநபரின் குறைபாட்டையோ விமர்சித்தாலும் இதற்கு அப்பாற்சென்று இந்த அரசியல் முறையை விமர்சிக்க ஐ.தே.கட்சிக்கு எந்த அருகதையும் இல்லை

மறுபுறம், அரசை விமர்சிக்கும் ஐ.தே.கட்சியின் தலைமைத்துவம் தொடர்பான பிரச்சினை அவர்களுக்குல் தீர்த்துக்கொள்ள முடியாமல் திணருவதை பகிரங்கமாகக் காணக்கூடியதாக உள்ளது. சஜித் மற்றும் ரணில் விக்கிரமசிங்க இருவருக்கிருவர் போர்கொடி ஏந்தி வருகின்றனர். இப் போராட்டம் கட்சி பிளவு படுவதற்கான ஆரம்பமாகவே உணரமுடியும். பெரிய துண்டு யாருடையது என்ற கேள்வி மட்டும் மிஞ்சியுள்ளது. ஆகவே ஐ.தே.கட்சியின் மாநாடுகள், யாப்பு சீர்திருத்தங்கள், மறுசீரமைப்புகள் யாவும் வெறும் கண்துடைப்புகளாகவே உள்ளன. இந்த உள்ளூராட்சித் தேர்தல் இந் நெருக்கடிகளை இன்னும் தீவிரமடையச் செய்வது பலரும் எதிர்பார்பதொன்றாகும் இத் தேர்தலிலும் ஐ.தே.கட்சி தோல்வியடைவது உறுதியென்றபடியால் ரணிலிடம் இந்த சுமையை ஏற்றுவது சஜித்தின் முயற்சியென்றபடியால் இதை சாத்தியப்படுத்துவதற்கு சஜித் மும்முரமாக செயல்பட்டு வருகிறார்.

மகிந்த, ரணில், சஜித் ஆகியோர் எமது நாட்டின் முதலாளித்துவ முறை நெருக்கடி பிரசவித்த தலைவர்களாகும். முதலாளித்து முறையை கடைபிடித்த தலைவர்களுல் ஜே.ஆர். ஜயவர்தனா என்பது ஒப்பீட்டளவில் சக்தவாய்ந்த தலைவர் ஆகும். அவராலேயே இந்த முதலாளித்துவ முறையினுல் எதிர்பார்த்தவற்றை வெற்றிகொள்ள முடியாமற் போனால் இந்த மூன்று தலைவர்கள் எம் மாத்திரம். எவ்வாறாயினும் எமது நாட்டில் பாட்டாளி வர்க்கம் வெற்றி கொண்டு சமத்துவமான சமுதாயம் நிலைநாட்டும் சூழலில் இவ் வெற்றிக்கு பாதையை நிர்மாணித்த நூதனசாலையொன்றை நிர்மாணிப்பதாக இருந்தால் இந்த மூவரின் பெயர்களுக்காக குறிப்பிட்ட இடத்தை ஒதுக்க வேண்டிவரும்.

1ம் பக்க தொடர்ச்சி
குட்டித்...

இன்னும் ஊர்ஜிதம் செய்கின்றது.

வேட்பு மனக்களை தயாரிக்கும் போதும் கூட்டமைப்புக்குல் கட்சிகளுகிடையில் பல மோதல்கள் இடம்பெற்றது. சிலரின் பெயர்களை உள்ளடக்கவில்லையெனவும் தனது பெயர் பட்டியலில் இல்லையென்பதால் சுயேட்சையாக போட்டியிடச் சென்ற சில இடங்களில் துப்பாக்கி சூட்டு சம்பவங்கள் கூட இடம்பெற்றுள்ளது. இது மட்டுமன்றி வேட்புமனு தாக்கல் செய்ததன் பின்பு மனுக்கல் நிராகரிக்கப்பட்டதால் மீண்டும் மோதல்கள் இடம்பெற்றதை காணக்கூடியதாகவுள்ளது. எனவே, ராஜபக' அரசு வரலாற்றில் எதிர்கொள்ளும் மிகப் பாரதூரமான தேர்லாக இத் தேர்தல் அமையப்போகின்றதெனவும் தெரிவித்தார்.

ஐ.தே.க. தனது கட்சி தலைமைத்துவ போட்டியில் சிக்கிக் கொண்டுள்ளதால் பொதுமக்கள் பிரச்சினைகள் தீர்வுகளுக்கான செயல்பாடுகளை புறந்தள்ளப்பட்டுள்ளனர். கிராம மட்டத்தில் ஐ.தே.க. ஆதரவாளர்கள் மிகவும் சிக்கலான நிலையில் உள்ளதால் இத்தேர்தலை மிக வலுவுடன் நடத்த முடியாத நிலையில் ஐக்கய தேசிய கட்சி காணப்படுகின்றது.

இந் நிலைமைகளுக்கு மத்தியில் நாட்டு மக்கள் மாற்று அரசியல் மார்க்மொன்றின் தேவையை உணருகின்றனர். எமது நாட்டு மற்றும் சர்வதேச அரசியல் களத்தில் அனுபவங்கள் வெலிகாட்டுவது பெதுமக்கள் முகம் கொடுக்கும் எந்தவொரு பிரச்சினையையும் நாம் வாழ்ந்துகொண்டுள்ள இவ் அரசியல் முறைக்கு தீர்க்க முடியாது என்பதாகும். மக்கள் விடுதலை முன்னணி இம்முறை தேர்தலில் தேர்ந்தெடுத்துள்ள ஏமாற்றுக்கு முடிவு! புதிய பாதைக்கான ஆரம்பம்! என்ற சுலோகம் மக்கள் எதிர்பார்புடன் நன்கு பொருந்துகின்ற படியால் கடந்த 63 வருடகாலமாக சம்பதிராயபூர்வமான அரசியல் செயல்பாடுகளினால் அன்றாடம் வாடி வதைப்புக்கு முகம்கொடுக்கும் பொதுமக்களை புதிய திருப்பத்தை ஆரம்பிப்பதற்காக இத் தேர்தலின் போது செயல்படுவோம் என இந்நாட்டு சிங்கள, தமிழ், முஸ்லிம் அனைத்து மக்களையும் அழைப்பதாக தெரிவித்தார்.

# துனீசியா

## மக்கள் போராட்டம் வீணாகுமா?

உலகத்திற்கு வட ஆப்பிரிக்காவில் அமைந்துள்ள துனீசியா இப்போது செய்திகள் உருவாக்கும் இடமாக மாறியிருக்கிறது, தம்மை ஒடுக்கு முறைக்கு உள்ளாக்கிய ஜனாதிபதியை நாட்டிலிருந்து வெளியேற்றியதன் பின்னராகும். கடல் போக்குவரத்திற்கு முக்கிய இடமாக அமைந்துள்ள துனீசியா 1956ம் ஆண்டு சுதந்திரம் பெறும் வரைய-ில் வடக்கில் அமைந்துள்ள பிரான்ஸ் ஏகாதிபத்தியத்தின் காலனித்துவ நாடாக இருந்தது. சுதந்திரத்தின் பின்னர் அரேபிய உலகில் ஏனைய நாடுகளுக்கு ஒப்பீட்டளவில் குறைவான மத வழிபாடுகளுடன் நாட்டை ஆண்ட ஹபீப் போகுப்பா (Habib Bourquiba) 30 வருடங்களாக சர்வாதிகார ஆட்சியை நாட்டில் நிலைநாட்டினார். அது, அவா-ின் அரசாங்கத்தின் பிரதமர் சினே அல் ஆப்தீன் பென் அலி 1987ல் மாளிகை சதியின் மூலம் ஆட்சியதிகாரத்தை கைப்பற்றும் வரையில்.

இன்னுமொரு சர்வாதிகாரியான மா-றிய பென் அலி நாட்டை பிரான்சின் உதவியுடனும் அவர்களின் செல்லபிள்ளையாக முதலாளித்துவ சீர்திருத்தங்களை துரிதமாக மேற்கொண்டார். தனியார்மயமாக்கலை ஆரம்பித்தலுடன் சுற்றுலாத்துறைக்காக நாட்டை திறந்துவிடுவது அவா-ின் நோக்கமாக இருந்தது. சுற்றுலாத்துறைக்காக நிவாரணம் வழங்குவதற்காக நாட்டில் புதிய சட்டங்களை உருவாக்கினார். இது பற்றி விசேடமாக கூறவேண்டியுள்ளதாவது, அதுபோன்ற ஒரு சட்டமே அவரது ஆட்சியின் முடிவுக்கு கொண்டு வந்ததிலாகும். பாரிய அடக்குமுறையை நாட்டில் கட்டவிழ்த்துவிட்ட பென் அலி எதிர்கட்சியினரை சிறைபடுத்தவும் எதிரா-ளிகள் மற்றும் ஊடகவியலாளர்களை வேட்டையாடும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டார். ஊடகங்கள் மீது சட்டங்களை விதித்தல் மூலமாகவும் கருத்துகளை வெளிபடுத்துவதற்கு முன் பரீட்சித்து பார்ப்பதிலும் அச்சுறுத்தல் மூலமாகவும் சலுகைகள் மூலமாக சுயத்தடையை விதித்துக் கொள்வதற்கு பென் அலி முயற்சிகளை மேற்கொண்டார்.

இந்த நிலைமைகளை அவர் எவ்வளவு தூரம் கையாண்டுள்ளார் நடைபெற்ற 3 தேர்தல்களிலும் அவரது RCD கட்சி பெற்றுக் கொண்ட வாக்கு வீதம் 99.9% மாகும். 1989ல் நடத்தப்பட்ட ஜனாதிபதித் தேர்தலில் அதிகாரத்தை வலுப்படுத்திக் கொண்ட பென்அலி மீண்டும் மீண்டும் ஆட்சிக்கு வருவதற்கு அரசியலமைப்பில் இருந்த தடையை அரசியலமைப்பு திருத்தத்தின் மூலம் அகற்றி 2004லும் 2009லும் மீண்டும் ஜனாதிபதி கதிரையில் அமர்ந்தார். சர்வஜன வாக்கும் முதலாளித்துவ தேர்தல்களுக்கு இடையிலான தொடர்புகள் எவ்வளவு அபாக்கியமானதென்பதை காட்டுவதற்காக, 2011 ஜனவரியில் நாட்டை விட்டோடிய அவர், 2009ம் ஆண்டு ஒக்டோபரில் கலந்துகொண்ட தேர்தல் முடிவுகளை ஆராய்ந்தாக வேண்டும். எதிர்பார்த்து போன்று பாரிய அடக்குமுறையின் கீழ் இடம் பெற்ற





இந்த தேர்தலில் பென் அலிக்கு 89.62% வீதமும் அவரது CRD கட்சிக்கு 84.59% "பிரமாண்டமான" வெற்றி கிடைத்தது. அதில் ஊடக பிரச்சாரங்களில் 97% வீதம் அவரின் தேர்தல் இயக்கத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த நிலமையிலாகும். அதே மாதத்தில் அவரது ஆட்சியை விமர்சித்து பிரான்ஸ் பத்திரிகை ஒன்றுக்கு இரண்டு கட்டுரைகளை வெளியிட்ட ஊடகவியலாளர் ஒருவர் 9 வருடத்திற்கு சிறைப்படுத்தப்பட்டதுடன் உயர் நீதிமன்றத்தினால் 2010 ஜனவரிய-ில் அந்த தீர்ப்பினை உறுதிபடுத்தியது. துனீசியா நீதித்துறை "பென் அலியின்" காலடியில் வீழ்ந்திருந்ததை காட்டுகிறது.

வெளி உலகத்திற்கு பொருளாதார வளம், மற்றும் நிலையான அமைதி ஆட்சியை பற்றிய படிப்பினைகளை வெளிப்படுத்திய பென் அலியின் துன-சியாவில் உள்ளே வளர்ச்சியடைந்து வந்தது அதற்கு முற்றிலும் எதிர்மாறான நிலமைகளாகும். உலக பொருளாதார நெருக்கடியினால் சுற்றுலாத் துறைக்கு பாதிப்பினை ஏற்படுத்தியதுடன் தொழின்மை, வறுமை துரிதமாக அதிகரித்தது. பென் அலியின் ஆட்சியின் ஊழல் மோசடிகள் உள்நாட்டில் மூடிமறைக்கப்பட்ட போதிலும், வெளிநாட்டு ஊடகங்கள் அவைகளை அம்பலப்படுத்தின. அடக்குமுறையின் மத்தியில் பென் அலிக்கு எதிராக மக்கள் கருத்து நீறுபூத்த நெருப்பாக இருந்தது.

தென்பகுதியில் சதி போசீட்டில் வேலையற்றிருந்த பட்டதாரியான மொஹம்மட் பொஆசிசி தமது குடும்பத்தின் வாழ்க்கை சுமையை சுமப்பதற்காக எதையாவது தெய்தாக வேண்டுமென முடிவு செய்வதும் இந்த சந்தர்ப்பத்திலாகும். வண்டியொன்றில் மரக்கறிகளை ஏற்றி வீதி யோரத்தில் வைத்து விற்பதற்கு அவர் எண்ணினார். ஆனால் உல்லாச பிரயாணிகளுக்கு அது ஒரு கெட்ட காட்சியாகும். நகரசபை அதிகாரிகள் அவரது வியாபாரத்திற்கு இடமளிக்கவில்லை. இந்நடவடிக்கைகளால் அவர் வாழ்வ தற்கிருந்த சகல வழிகளும் மூடபட்டதால் அவர் தீமூட்டி மரணிக்கிறார். அது 2010 டிசம்பர் 17ம் திகதியாகும்.

"பென் அலி" சர்வாதிகாரிக்கு எதிராக முதலாவது அடியாக அமைந்த இந்த மரணமாகும். மக்கள் தமது மனதில் அடக்கிக் கொண்டிருந்த கோபத்தை வீதிகள் தோறும் காட்டத் தொடங்கியது அதன் பின்னராகும். தொழிலின்மை விலைவாசி உயர்வு அவர்களின் அரச எதிர்ப்பை தீவிரப்படுத்தியது. வீத-ியில் இறங்கிய மக்களுக்கு பென் அலி வழமைபோல் அடக்குமுறையை கட்டவிழ்த்துவிட்டு அதேவேளை தொழியின்மையை தீர்ப்பதற்கு 3 லட்சம் தொழிலை உருவாக்குவதாக கூறினார். அது ஜனவரி 10ம் திகதியா-கும். ஆனால் மக்கள் ஏமாற்றுக்கு உள்ளாகும் எல்லைக்கே வந்திருந்தனர். நூற்றுக்கு 4.5% தற்போதய பொருளாதார வளர்ச்சியினுள் அது கேலிக்கூத்தாகுமெனவும் பென் அல-ியின் குடும்பத்திலிருந்து வெளியில் பணம் செல்லாதென்று மக்கள் புரிந்துக் கொண்டிருந்தனர். அவசர நிலையை பிரகடனப்படுத்தி அரசாங்கத்தை களைத்து 6 மாதங்களில் தேர்தலை நடத்துவதாக உறுதியளித்து மக்கள் எதிர்ப்பினை சமன் செய்யும் முயற்சியில் பென் அலி ஈடுபட்டார். பென் அலிக்கு எதிரான மக்கள் திரண்டதினால் அரசாங்கம் தோல்வியடைந்தது ஜனவரி 14ம் திகதி நாட்டை விட்டோடும் நிலை பென் அலிக்கு ஏற்பட்டது. வரலாற்று கேலிக்கிடமாக்கிய அவரின் பிரதமர் அரச தொலைக்காட்சியில் தோன்றி தாம் துனீசியாவின் அதிகாரத்தை கைப்பற்றியுள்ளதாக அறிவித்தார்.

ஆனால் பென் அலிக்கும் அவரது அரசாங்கத்திற்கும் எதிராக மக்கள் எதிர்ப்பினை தணிக்க முடியாது போ-னதினால் இடைக்கால அரசாங்கத்தில் சில எதிர்கட்சி உறுப்பினர்களுக்கு அமைச்சுப் பதவி சிலவற்றை பெற்றுக் கொடுப்பதற்கு பென் அலியின் அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது.

பென் அலியின் அவரின் குடும்ப மரத்திற்குரிய சுவிஸ் வங்கி கணக்குகளை தடைசெய்தல் அவா-ின் உறவினர்களை கைது செய்வதில் ஆர்பாட்டத்தில் ஈடுபடும் துனீசிய மக்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வினை பெற்றுக் கொடுக்கவில்லை. மறுபக்கத்தில் ஏகாபத்திய நாடுகள் இந்தப் பிரச்சினையை முகாமைத்துவம் செய்வது, வெறுப்பிற்கு உள்ளான ஆட்சியாளரை அகற்றிவிட்டு முதலாளித்துவ முறை நெருக்கடிக்கு செல்லாது பாதுகாத்துக் கொள்ளும் இலக்குடனாகும். பிரான்சின் செல்லப் பிள்ளையாக இருந்த பென் அலிக்கு நாட்டை விட்டு ஓடிய பின்னர், பிரான்ஸில் பாதுகாப்பு கிடைக்காததும் அதனாலாகும். சகல பாவங்களையும் பென் அலியின் மீது வைக்கும் ஏகாதிபத்தியம் மக்களுக்கு தேவையான மாற்றம் துனீசியாவில் நிகழ்வதை எதிர்பார்க்கவில்லை.

ஆனால் துனீசிய மக்களுக்கு தேவையான மாற்றமான மாற்று சமூக முறையின் தேவையை அரசியல் ரீதியாக பிரதிநிதித்துவம் செய்வதற்கு தகுதியுள்ள சமூக சக்தி இதுவரையில் துனீசியாவில் இல்லை. அல்லது அப்படியானவற்றிற்கு இந்நாள் வரை மக்கள் சக்தி உருவாகவில்லை. 24 வருட பென் அலியின் ஆட்சியில் துவண்டுபோன மக்கள் அரசியல் வழிகாட்டலின்றி வீதிக்கு இறங்கியுள்ளார்கள். ஆனால் அவர்களின் போராட்டம் இன்னுமொரு சர்வாதிகாரிக்கு 99.9% வாக்கு எண்ணிக்கையை நிலைநாட்டி முடிவடையுமானால் பென் அலியை விரட்டுவதற்காக வீதிகளில் ஓடிய இரத்தம் வீணாகிபோகும். பூகோள ரீத-ியில் வேறுபட்டாலும் துனீசிய சமூக பொருளாதார அரசியல் யதார்த்த பிரதிநிதித்துவம் செய்கின்ற பல நாடுக-ளில் இன்னும் முடிவடையாத துனீசிய மக்கள் போராட்டம் முக்கிய பாடங்களை புகட்டும் என்பது நம்பிக்கையாகும்.

# ராஜபக்ஷவின் இந்திரஜாலத்துக்கு முடிவு!
# நாட்டை புதிய பாதையில் திருப்ப வேண்டும்!

பொது மக்களுக்கு எந்தவித வெற்றிகளையும் பெற்றுகொடுப்பதற்கு ராஜபக்ஷ ஆட்சிக்கு முடியாம லுள்ளதாகவும் அண்மைக் காலத்தில் நாடெங்கும் உள்ளூராட்சி சபைகள் சிலவற்றில் அரச சார்பு தரப்பினர் அவ் உள்ளூராட்சி சபைகளின் வரவு-செலவு திட்ட வாக்கெடுப்புகளில் தோல்வியடைந்துள்ளதாகவும், தற்போது அரசாங்கத்துக்கு எதிராக அரச தரப்பினரிடமிருந்தே எதிர்ப்பு மேலோங்கி வருவதால் ராஜபக்ஷவின் மாயாஜால வித்தைகள் முடிவுபெற்றுள்ளதாகவும் தோழர் சோமவன்ச அமரசிங்க சுட்டிக்காட்டினார். அண்மையில் மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் இவ்வாறு கருத்து வெளியிட்டார் அங்கு மேலும் கருத்து வெளியிடுகையில்



அரசு தேர்தல்களை நடாத்த தயாராகும் எந்த சந்தர்ப்பத்திலும் மக்கள் விடுதலை முன்னணி எந்த நிலையில் இருந்தாளும் அவற்றை எதிர்கொள்ள தயாராக இருப்பதாகவும் இம்முறை உள்ளூராட்சி சபை தேர்தலை மக்கள் விடுதலை முன்னணி தனியாக போட்டியிட தயார் என்பதையும் தெரிவித்தார்.

தற்போது நாட்டுக்கு தேவை மக்களுக்கு வெற்றிகளை பெற்றுக் கொடுக்கக் கூடிய உரிய திட்டமாகும். இவ்வாறான திட்டத்தை வெளியிடவோ நடைமுறைபடுத்தவோ இதுவரை காலமும் நாட்டை ஆட்சிசெய்த, தற்போது ஆட்சிசெய்கின்ற கட்சிகளுக்கு முடியாது என்பதை தேவைக்கு அதிகமாக ஊர்ஜிதம் செய்துள்ளது. எனவே நாட்டை புதியதொரு பாதையில் கொண்டு செல்ல முடிவது மக்கள் விடுதலை முன்னணிக்கு மட்டுமே ஆகும். ஆகவே இத் தேர்தலிலே அப்பாதைக்கான ஆரம்ப அடியை வைக்குமாறு நாம் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் அனைவரையும் கோரிநிற்கிறோம்.

இதனூடாக மட்டுமே நாடெங்கும் குறிப்பாக வடபகுதியில் நிகழும் அடாவடித்தனங்களையும், கொளை. கொள்ளை மற்றும் ஜனநாயக எதிர்ப்பு நடவடிக்கைகளையும் நிறுத்தி இலங்கைவாழ் சகல மக்களிடையேயும் தேசிய ஒற்றுமையை கட்டியெழுப்பி நாம் அனைவரும் நிம்மதியாகவும், சொகுசாகவும் வாழக் கூடிய சூழலை நிர்மாணிக்க முடியும் என்பதையும் தெரிவித்தார். இச் சந்தர்ப்பத்தில் மக்கள் விடுதலை முன்னணியின் பிரதான செயலாளர் தோழர் ரில்வின் சில்வா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## முகங்களை மாற்றுவதால் பலனில்லை முறையை மாறறியமைப்போம்!



நாடு பழைய தண்டவாளத்திலேயே பயணிக்கும் போது ஓட்டுனரை மட்டும் மாற்றுவதால் ஓடு பாதையை மாற்ற முடியாது எனவும் முகங்களை மாற்றுவதை நிறுத்தி நாம் வாழும் இந்த அநீதியான முறையை மாற்றுவதாலேயே நாம் முகம் கொடுக்கும் அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வுபெற முடியும் என மக்கள் விடுதலை முன்னணி சுட்டிக்காட்டுகிறது.

கடந்த 7ம் திகதி மக்கள் விடுதலை முன்னணியால் கொழும்பு கோட்டையில் ஆரம்பித்து நாடாளாவிய மட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட மக்களை அறிவுறுத்தும் துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கும் நடவடிக்கையின் இறுதியில் மக்கள் விடுதலை முன்னணி பிரதான செயலாளர் தோழர் ரில்வின் சில்வா கருத்து வெளியிடுகையில் கூறியதாவது, இந்த காலாவதியான, மக்களை சீவிப்பதற்கு வளிசமைத்து கொடுக்க முடியாது என்பதை ஊர்ஜிதம் செய்துள்ள, அநீதியான சமுதாய முறையை மாற்றியமைத்து, இதற்கு பதிலாக பொது மக்கள் நலனை பூர்த்திசெய்யும், மக்கள் நலனுக்காக உற்பத்தி மேற்கொள்ளும், உற்பத்தியின் பலன் சகல மக்களுக்கும் நியாயமான முறையில் கிடைக்கும், மக்கள் மயமான பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியும். இலங்கைவாழ் மக்களிடையே உண்மையான தேசிய ஒற்றுமையை கட்டியெழுப்பும் சகோதரத்துவமும் மனிதாபிமானத்தையும் உள்ளடக்கிய புதிய சமுதாய முறையை நிலைநாட்டவுள்ளதாகவும் இதற்காக மக்கள் விடுதலை முன்னணி தலைமை தாங்க தயாராகவுள்ளதாகவும் தெரிவித்தார்.

## ஒடுக்கு முறைக்கு எதிரான மகளிர் அணிதிரள்வு!




ஜனவரி 22ம் திகதி காலை கொழும்பு புதிய நகர மண்டபத்தில் ஏற்பாடு செய்திருந்த சுதந்திரத்துக்கான பெண்கள் அமைப்பின் அரம்ப மாநாடு அங்குரார்ப்பனமாகியது. இவ் வைபவத்தில ஒடுக்கப்பட்ட பெண்கள் வடக்கு, கிழக்கு என்ற பேதமின்றி கலந்துகொண்டனர். வர்க்க சமுதாயத்தில் ஒடுக்கு முறயில் சிக்கியுள்ள பெண்களை வர்க்க சமுதாய ஒடுக்கு முறையிலிருந்து மீட்டெடுக்காது ஆணாதிக்கத்திலிருந்து மட்டும் மீட்டெடுப்பதற்காக மட்டும் இயங்கும் பல களிர் அமைப்புகள் உள்ள சூழலிலே எமது நாட்டு பெண்களின் உண்மையான விடுதலைக்கான இயக்கம் இதனூடாக ஆரம்பிக்கப்பட்டது. சமுதாய, பெருளாதார மற்றும் கலாச்சார ரீதியாக சமவுரிமையற்ற நிலையில் ஒடுக்கப்பட்டுள்ள பெண்களை யுத்தத்திற்கு பின்பு குறிப்பாக வடக்கு, கிழக்கு பெண்கள் தனது கணவரை அல்லது பிள்ளைகளை இழந்து தமது உற்றார் உரவினர்களை இழந்து. தம் சீவியத்தை கொண்டு செல்வதற்கான வாழ்வாதாரமின்றி, வசிப்பதற்கு உரிய நிழல் இன்றி சொல்லொண்ணா துயரங்களை அனுபவித்து வருகின்றனர்.

இவ்வாறான பெண்களின் நிலைமைகளை கவனத்திலெடுத்து இவர்களின் பிரச்சினைகளை பிரதிநிதித்துதும் செய்வதை முதன்மையாகக் கொண்டே இம் மாநாட்டை ஆரம்பிக்கப்பட்டது. இதன்போத சுதந்திரத்திற்கான பெண்கள் அமைப்பில் செயற்குழுவையும் தேர்ந்தெடுக்கப்ட்டது. இதில் மக்கள் விடுதலை முன்னணியின் மத்திய குழு அங்கத்தவறான சகோதரி திமுது ஆட்டிகலவை தலைவராகவும், சட்டத்தரணி சகோதரி தரணி சமுத்திரிகா செயலாளராகவும், தேசிய அமைப்பாளராக பேராசிரியை சகோதரி சரோஜா சாவித்திரி போல்ராஜையும், பொருப்பாளராக ஊடகவியலாளர் சகோதரி சத்துரிகாவையும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

சகோதரி சரோஜா போல்ராஜ், சகோதரி திமுத்து ஆட்டிகல ஆகியோர் உட்பட பலர் இம் மாநாட்டில் உரையாற்றியதோடு சுமார் ஒரு வருடத்துக்கு முன்பு காணாமற்போன பிரகீத் எக்நெலிகொட அவர்களின் மனைவியார் வாழ்த்து செய்தியை வழங்குவதற்கு வருகை தந்திருந்ததும் இதில் குறிப்பிடத்தக்கதாகும்.




,யஇல 198/19 கொழும்பு 10ல் வசிக்கும் டில்வின் சில்வா அகிய என்னால் இல 43/43 வலவுவத்த வீதி தெல்கந்த நுகேகொடை சரளா அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.